# சக்தி

சஞ்சிகை

இதழ் - 1



வெளியீடு - கலை இலக்கிய சாகரம்

KADDAIVELY - NELLIADY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே....

**கவிதைகள்**


| | | |
|---|---|---|
| கைவீசி நடந்து... | துவாரகன் | 02 |
| எங்களுர்க் கலியாணம் | எஸ்.குணேஸ் | 25 |
| இருள் சூழ்ந்த தேசத்தின்... | கி.நவநீதன் | 40 |


**சிறுகதை**


| | | |
|---|---|---|
| வல்லை வெளி | குந்தவை | 03 |


**உருவகக் கதை**


| | | |
|---|---|---|
| களைகள் | ப.தயாளதாசன் | 41 |


**கட்டுரைகள்**


| | | |
|---|---|---|
| இடம்பெயர்ந்தோரின் இடர் களைவோம் | எழில்மதி | 09 |
| இந்த நிலை மாறுமா? | நவீனன் | 26 |


**விவாத அரங்கு**


சிறந்த இளையதலைமுறையினரை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிப்பது சமூகசூழலா? குடும்ப சூழலா?

| | | |
|---|---|---|
| | கி.நவநீதன் | 33 |
| | வெ.பிரேமச்சந்திரன் | 37 |


**மேலும்.....**


| | | |
|---|---|---|
| உலகப்பார்வை- உளச்சார்பு | சிவயோகச்செல்வன் | 13 |
| புதிய வரவுகள் | பிரியா | 29 |
| சொல்லாமலே | எஸ்.குணேஸ் | 30 |
| பொது அறிவுப் போட்டி | | |



**அட்டைப்பட ஓவியம்: அ.மார்க்கு.**

(நன்றி - இன்னுமொரு காலடி)

கணனி எழுத்தமைப்பு,பக்கவடிவமைப்பு - **எஸ்.மகேஸ்வரன்**

**அச்சுப்பதிப்பு- மருதம் பதிப்பகம், நெல்லியடி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KADDAIVELY - NELLIADY
M. P. C. S. Ltd ...DY
KARAVEDDY.

கலை இலக்கிய சாகரம்
தொண்டைமானாறு - கெருடாவில்

# சக்தி

வாழ்வு பெருக்கும் மதியே சக்தி
தாழ்வு தடுக்கும் சதிரே சக்தி
- பாரதி

சக்தி சஞ்சிகை
இதழ் – 01
டிசம்பர் – 2000

வெளியீடு
தொண்டைமானாறு,
கெருடாவில்,
கலைஇலக்கிய சாகரம்.

தொடர்புகளுக்கு:–
ஆசிரியர் குழு,
சக்தி
கலை இலக்கிய சாகரம்,
தொண்டைமானாறு.

## ஒரு பயணம்

வணக்கம்

கலை இலக்கிய சாகரத்தின் முதற்பயணம் சக்தி. இப்பயணத்தில் தேடவும், பதிக்கவும், படைக்கவும். விமர்சிக்கவும் சக்தி தன்னாலான பணியினை ஆற்ற தயாராக உள்ளது.

ஒரு சமூகத்தின் உயிர்த்துடிப்பான வாழ்வியல் கூறுகளை கலை இலக்கியங்கள் உள்வாங்கி வைத்துள்ளன. இவற்றோடு இணைந்த பண்பாட்டு விழுமியங்களும் பேணப்படவெண்டியனவே. அதே நேரம் சமூகத்தின் அதர்மமான கோட்பாடுகளும் கேள்விக்கு உட்படுத்தப்பட வேண்டியனவாகும்.

இந்நிலையில், சக்தி தன் பணியினை ஆற்றவும் கலை இலக்கியத்தின் புதிய செல்நெறிகளை நோக்கி தன் பார்வையை விசாலிக்கவும் திடங்கொண்டுள்ளது.

உங்கள் எண்ணங்கள், பதிவுகள் கண்டு மீண்டும் தொடர்வோம்.

ஆசிரியர் குழு
சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவீசி நடந்து........

~துவாரகன்~

என் கைகள் இரண்டும்
வீசி நடந்து தொலைத்து விட்டேன்
இன்று வரையும் தேடிக் கொண்டிருக்கிறேன்.
பகை, பொருள்,
இதை...... கூட தொலைப்பதற்குரியதே
என் நீக்கக் காற்றின் முகவராய்
இனை சிறகுவி.
நான் தொலைத்து விட்டேன்.
தேடிக்கொண்டிருக்கிறேன்.
வெண்பனைத் தரையில் வீழ்ந்து மறைந்துவிட்ட
வெள்ளிக் காசுகள் போல...
என் கைகள் இரண்டும் வீசி நடந்து
தொலைத்துவிட்டேன்.

துலாக்கயிறு அறுந்து
ஆழ்கிணற்றில் அமிழ்ந்தாலும்
தூண்டியிட்டு எடுத்திடலாம்
ஆனால் இது தூண்டியிட்ட வாழ்வு.
ஒருவாய்ச் சோற்றுக்கு
தினமும் அங்கலாய்க்கும்
தெரு நாயாகிப் போன வாழ்வு.
முழுநிலவு வானில்
முகம் காட்டும் போதெல்லாம்
நிலவை ரசிப்பதற்கும்
நாதியற்றுப் போன வாழ்வு.

நிலவை... உறவை......
உலகை...... அறிந்தாலும் அறிவொளிகளாய்
ஞானியாகலாம்.
அறியாதிருந்தாலும் ஏட்டாளர்க்கும்மை.
பிஞ்சுப்பருவம்கூட... அறியாப் பருவம்தான்.
ஆம், நான் தேடிக்கொண்டிருக்கிறேன்
எப்போதோ தொலைத்துவிட்ட
என் பிஞ்சுப் பருவத்தின்
நினைவறியா நாட்களை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KADDAIVELY - NELLIADY
M. P. C. S. Ltd.
KARAVEDDY.

30/-

சிறுகதை

# வெள்ளைவெளி

-குந்தவை

வேகத்தைக் குறைத்தவாறு றோட்டின் நடுப்பகுதியிலிருந்து சரிவாகச் சென்ற அந்த மோட்டார் சைக்கிள், ஆமிக்காரர்கள் முன் நின்றது. அது சரிவாக வந்த விதத்தில் ஒரு லாவகம் தெரிந்தது.

ஆமிக்காரர்கள் அந்த மோட்டார் சைக்கிளைச் சுற்றி சுற்றி வந்தனர். ஒருவன் பின்சீற்றை அமுக்கிப்பார்த்தான். மற்றவன் முன்பகுதியிலிருந்த பிளாஸ்ரிக் கூடையைக் கிண்டினான். இவளுக்குச் சிரிப்பாகக்கூட வந்தது. குண்டு கொண்டு வருபவன் இப்படியா பகிரங்கமாகக் கொண்டுவருவான்?

இவள், இப்படி அவர்களை வேடிக்கை பார்ப்பதை உணர்ந்தால் அவர்கள் றோட்டைக் கடந்து அவளருகிலும் வரக்கூடும். ஏன் இங்க நிக்கிறது 'பாக்'கில் குண்டு இருக்கா?

கேட்கமாட்டார்களென்றும் தோன்றியது. யாழ் போகும் பஸ் சோதனை செய்யப்பட இறக்கிய தன் பயணிகளை மீள ஏற்ற, நிற்குமிடம் இது. அத்தோடு தேவன் தன்னை இங்கே கொண்டுவந்து இறக்கியதைப் பார்த்துக் கொண்டு தானே நிற்கின்றார்கள்? இவள் யாழ்ப்பாணம் போகும் பஸ்ஸை எதிர்நோக்கி நிற்கிறாள் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கும்.

அதே வலப்புறத்திலிருந்து, இப்பொழுது ஒரு சைக்கிள் வந்தது. தூரத்தில் பார்க்கையிலே ஒரே பச்சையாகத் தெரிந்தது. இவ்வளவு வாழைக்குலைகளை ஒரு சைக்கிளில் ஏற்றமுடியுமென இவளுக்கு இதுவரை தெரிந்ததில்லை. ஒவ்வொரு பக்கவாட்டிலும் இரண்டிரண்டு வாழைக்குலைகள் தொங்கின. பின்னால் கேரியரிலும் சில வாழைத் தண்டுகள் தெரிந்தன. எல்லாமாக ஏழெட்டிருக்கும். சீற்றிலிருந்தவர் தொடைவரை மடித்துவிட்ட வேட்டி, அரைக்கைச் சட்டை, ஒட்டிய கன்னம் மேலேறிய நெற்றிவியர்வைஈரம். தொலைவிலிருந்து நீர்வேலி பக்கமிருந்து வருபவராக இருக்கலாம். அங்குதான் வாழைக்குலைகள் மலிவாய் கிடைக்கும்.


இந்த ஆளை இறங்கச்சொல்லக்கூடாதென விருப்பம் எழுந்தது. இறங்கினால் மீளச் சீற்றில் ஏறுவதற்கு அவர் கஷ்டப்பட நேரிடும். இவள் விரும்பியதுமாதிரி ஆமிக்காரர்கள் இவரை'போ' என சமிக்ஞை செய்துவிட்டார்கள். இப்பொழுது நெல்லியடியில் ஒவ்வொரு தேநீர்க் கடையாக இவர் இறங்கி ஒவ்வொரு குலையாக அவிழ்த்து உள்ளே தூக்கிச் சென்று விற்பது மனதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிந்தது.பஸ் ஒன்றும் வரக்காணோம். பின் மண்டையில் வெய்யில் உறைக்கத் தொடங்கிவிட்டது. தொப்பியோ, குடையோ எடுத்துவர வேண்டுமென்ற ஞாபகம் வீட்டைவிட்டுக் கிளம்பும்போது வரவில்லை.

காற்று வேறு. சேலையை உடம்போடு ஒட்டி அலைத்தது.



ஒரு லான்ட் மாஸ்ரர் நிறைய ஆமிக்காரர்கள் போனார்கள். இப்பொழுது ஆமிக்காரர்களைத்தவிர வேறு ஒருவரையும் காணோம்.

"இப்ப பஸ் வரும்" என்றுதான் இவ்விடத்தில் இறக்கிவிடும்பொழுது தேவன் சொல்லிப் போனான். அவன்பேச்சை நம்பி இறங்கியாயிற்று. இறங்கிய உடனேயே வந்த மினிபஸ்ஸைக்கூட கூட்டம் அதிகம் எனப் போகச் சொல்லியாயிற்று.

இதில் இறக்கிவிட்டவனை, அப்படியே இன்னும் கொஞ்ச தூரம் ஓடி, வைரவர் கோவிலடியில் இறக்கிவிட்டுப்போகச் சொல்லியிருக்கலாம். அது அப்பொழுது தோன்றவில்லை. இந்த எதிர்காற்றில் தன்னையும் வைத்துக்கொண்டு உழக்குகின்றானே என இரக்கந்தான் அப்போதிருந்தது.

வைரவர் கோவிலடியில் நல்ல மரநிழல் இருக்கும். சனநடமாட்டமிருக்கும். மர இலைகள் வடித்துத்தரும் இதமான காற்ற வீசும்.

இங்கே ஒரு வெற்றுத்தந்திக் கம்பமும், ஒற்றைச் சவுக்குமரப் புதருமே துணை.

இந்த றோட்டில் ஏறியதுமே, இப்படி ஆமிக்காறன் முன் எதிரும்புதிருமாக நிற்கவைத்துவிட்டுப் போனவன் மீது ஆத்திரமாகக் கூட வந்தது. கூடவே 'எதிரும் புதிரும்' எனச் சொல்லமுடியாது என்றும் தோன்றியது. இடைவெளி நாற்பது, ஐம்பது யார் இருக்குமா?

வலப்புறத்தில் இருந்து ஒரு சைக்கிள் வந்துகொண்டிருந்தது. கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக்கொண்டாள். அந்த ஆள் கரியரில் ஏதோ உயரமாகக் கட்டி எடுத்துக்கொண்டு வந்தார். அந்த ஆள் அவளெதிரே வந்தபொழுது காற்றில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தியிருந்த துணி மேலேற உள்ளே பானைகளின் அடுக்குத் தெரிந்தது. அச்சுவேலிச் சந்தைக்குப் போகிறதாயும் இருக்கலாம்.

வைரவ கோவிலடியில், ஆமிக்காரன் நிற்கமாட்டான் என்றில்லை. நின்றாலும் ஒதுக்கித்தான் நிற்பான். ஒருமுறை வைரவர் கோவிலடியில் பஸ்ஸிற்கு நின்றபோது பின்னால் தெரிந்த பாழடைந்த கிணற்றை எட்டிப் பார்க்கத் தோன்றியது. கிணற்றருகே போனவளுக்கு கோயிலின் பின்புற வாசலோடு ஒரு ஆமிக்காறன் மடியில் துவக்கோடு சாய்ந்து கொண்டிருப்பது தெரியவே அப்படியே திரும்பி விட்டாள்.

வைரவர் கோயிலில் ஓட்டுக்கூரை இங்கே நிற்கையிலும் தெரிந்தது. அப்படியே நடந்து போய்விடலாம்.

போகவிரும்பினாலும் ஏதோ ஒன்று - நடுவழியில் நடக்கையில் பஸ் வந்துவிட்டால் மறித்தால் நிற்பானோ. 'நிறுத்தம்' இல்லாத இடத்தில் என்ற தயக்கமாகவுமிருக்கலாம். 'இன்னும் கொஞ்சநேரம், கொஞ்சநேரம்' எனக் கெஞ்சுவது போலிருந்தது.

இடப்புறத்திலிருந்துதான் ஒரு பஸ் வந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து வரும் பஸ். அது இவளைத்தாண்டி, முதுகு காட்டிக்கொண்டு போய் சோதனைச் சாவடியருகே நின்றது. ஆமிக்காரர்களையும் அது மறைத்துவிட்டிருந்தது. பஸ்ஸிலிருந்து இறங்கி நடப்பவர்களின் வரிசை, பஸ்ஸின் மறுபுறத்திலிருந்து நீண்டது.

இந்த நேரத்தில் இவள் மறுபுறமாக றோட்டில் விறு விறுவென நடக்கத் தொடங்கினாள். ஓட்டுக் கூரை தெரிந்து கொண்டே வந்தது.

இருபுறமும் பள்ளமாய் வெடிப்பாய் தெரிந்த நிலம். நடுவே றோட் மட்டும் சற்று உயர்ந்திருப்பதுபோலத் தெரிந்தது.

அந்த உயர்ந்த றோட்டில் இவள் தனியே நடந்தாள். நடந்து செல்லும் மனிதர்கள் என்று எவருமே இல்லை. சில நேரங்களில் அப்படியும் இப்படியும் கடந்து செல்லும் சைக்கிள்களைத் தவிர. ஒரு சைக்கிள் போனதிலிருந்து, மற்றச் சைக்கிள் சந்திக்கும் வரையிலான இடைவெளி, பெரிதாகையில் தனிமையும் பெரிதாய் தெரிந்தது.

இந்த வெய்யில் இல்லாவிட்டால் நடப்பது இவ்வளவு கஷ்டமாக இராதெனப் பட்டது. அதுவும் அந்தி மயங்கும் வேளையென்றால் அதுவே துணையாக இருக்கும். ஒருவித சிநேகிதத்தைக் கொண்டுவந்திருக்கும் எதிரே மாலைச் சூரியனின் வர்ணக் கோலங்களைப் பார்த்தபடி நடப்பதே ஒரு சந்தோஷமாகவும் இருக்கக்கூடும்.

மாலையைத் தொடர்ந்து வருமிரவையும் கற்பனை செய்து கொண்டாள். மனத்தில் இலங்கையர்கோனின் வல்லையைக் கடக்கும் மாட்டுவண்டில் வந்தது.

அரிக்கன் லாம்பு, வண்டிலின் கீழ் 'முணுக் முணுக்' என அசைந்து அசைந்து எரிய மாட்டுச் சலங்கைகள் 'சல் சல்' என லயத்தோடு தாளமிட, காற்றை எதிர்கொண்டவாறு, உற்சாகமாகப் பாடிக்கொண்டே இவளும் 50 வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னதாக ஏன் இலங்கையர் கோனின் காலத்திலாவது பிறந்திருந்தால்கூட இந்த மாட்டுவண்டிச் சவாரிச் சுகம், இவளுக்குக் கிடைத்திருக்கும்.

கொள்ளிவால் பிசாசுகளைக்கூடப் பார்த்திருக்கலாம்.

அதை சதுப்பு நிலத்திலிருந்து எழும் ஒரு வித வாயுவென அறிந்து கொண்டு ஆர்வமாய் பார்த்திருப்பாளோ!; அல்லது அறியாமையினால் பிசாசுதான் என எண்ணிப் பார்த்திருப்பாளோ?

அந்தக்காலப் பிசாசு என்ன பிசாசு? இந்தக் காலத்தில் எத்தனை உண்மையான பிசாசுகளை இந்த வெளியில் மக்கள் பார்த்துவிட்டார்கள்?

திடீரெனத் தாக்கிய எண்ண அதிர்வில் இவள் நினைவு அழிந்து போனாள். சில கணம்..

பிறகு, நினைவுகளை முட்டி மோதிக் கொண்டு வந்தன.

"வைரவ கோயிலடியிலை இன்னாரை ஹெலி அடிச்சுப் போட்டுதாம்"
"ஷெல் வருகுதெண்ட உடனேயே நாங்க சைக்கிளை அப்படியே போட்டுவிட்டு பக்கத்திலிருந்த சீமெந்துக் குழாயுக்கை பதுங்கி விட்டம். ஆனா கந்தசாமி ஓடிவர முன்னமே......

இவை மட்டுமா?

வல்லை வெளியிலே யாரையோ அடிச்சுப் போட்டு, போட்டுக் கிடக்காம்' விடிகாலையில் வரும் செய்திகள் - இயக்க மோதல்கள்.

உடனேயே இந்த இடத்தைக் கடந்துவிட வேண்டுமென்ற பரபரப்பு தவிப்பாய் சூழ்ந்து கொண்டது.

வியர்க்க வியர்க்க நடக்கையில் வல்லை வெளியில் தனியே அகப்பட்டு ஹெலி துரத்த தான் ஓடுவதான கற்பனை வந்தது.

உடனே வெட்கமும் வந்தது. ஏன் ஓடவேண்டும் இப்படி இப்பொழுது? அன்றொருநாள் ராணியக்கா விபரித்திருக்கிறாள் இதை. வல்லை வெளியில் தாங்கள் பயணித்த வேளை மினிபஸ்ஸை ஹெலி துரத்தி வந்ததை. தாங்கள் அடைந்த பீதியை போட்ட கூக்குரலை எல்லாம். கடைசியில் டிறைவரின் ஓட்டவேகம் ஒன்றே அன்று அவர்களைக் காப்பாற்றியதாம்.

கோவில் ஓட்டுக் கூரை, பக்கத்தில் தெரிந்தது. சனநடமாட்டம் தெரிந்தது. மரநிழல் தெரிந்தது.

கோவிலடி கலகலப்பாகத்தான் இருந்தது. போவோரும் வருவோரும் தத்தம் வாகனங்களை நிறுத்தி இறங்கி வந்து முதலில் பிள்ளையாரையும் பின் வைரவரையும் கும்பிட்டு, உண்டியலில் காசு போட்டு, திருநீறு, சந்தனமெடுத்து சென்று கொண்டிருந்தபோது

ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞன் தன்'கும்பிடலை' முடித்துக்கொண்டு, தன்னோடு வந்தவர்களுக்காக காத்து நின்றான். பிள்ளையாரின் விழித்த கண்களைப் பார்த்தபடி அந்த இளம் பெண்களும் இன்னும் கும்பிட்டுக் கொண்டிருந்தனர். ஒருத்தி அரை பாவாடை சட்டைக்காரி. மற்றவள் சேலைக்காரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதலாக வைரவரிடம் வரம் வேண்டிக்கொண்டு அவர்கள் திரும்புகையில் அவன் சீற்றில்மேலேறிக் காத்திருந்தான். இளையவள், அவன் தோளில் கை வைத்து எம்பி முதலில் பின்சீற்றில் ஏறினாள். பின்னால் மற்றவள். மோட்டார் சைக்கிள் புறப்பட்டது.

இப்பொழுது ஸ்கூட்டரில் வந்த இன்னொரு ஜோடி. சற்று வயதான ஜோடி பிள்ளையாரைக் கும்பிட்டுக்கொண்டிருந்தது. ஒரு கார் வந்து மறுபுறம் நிற்க ஒரு பெரியவர் இறங்கிக் கொண்டிருந்தார்.

இவள் தானும் சாமி கும்பிட்ட, உண்டியலில் காசு போட்டாள். திருத்தப்பட்டு, புதுப் பொலிவோடு இருந்த கோயிலை ஒருவித சந்தோஷத்துடன் பார்த்தாள். பின்னால் தெரியும் ஆற்றை ரசித்தாள். பஸ்ஸுக்காக காத்திருந்தாள்.

தூரத்தில் பஸ் வருவது தெரிந்தது. மஞ்சள் பஸ். இவள் சற்று முன்னே வந்த அதை கைநீட்டி மறிக்கத் தயாரானாள்.

பஸ் நிற்கவில்லை. உள்ளே காக்கி சட்டைக்காரர்களே தெரிந்தனர். பின்புற வாசலில் துவக்கோடு நின்ற ஒருவன் மறிக்க முற்பட்ட இவளை கேலியோடு பார்ப்பதாய் பட்டது.

இவளுக்கு சற்று வெட்கமாக போய்விட்டது. இவர்களெல்லாம் இப்படி பொது போக்குவரத்துக்கான பஸ்களை தமக்கென எடுப்பதினால்தானே இந்த எட்டரை மணி பஸ்கூட இன்னும் வரவில்லை என எரிச்சலபட்டாள்.

இனி மினி பஸ்ஸில்தான் பேகவேண்டும். அதுதான் வரும். அதை இப்படி கைநீட்டி மறிக்கத் தேவையில்லை. எல்லா மினி பஸ்களுமே இந்தக் கோயிலடியில் தாமாகவே நிற்கும். பயணிகளிடம் சேகரித்த சில்லறைகளை உண்டியலில் போட கொண்டக்ரர் பஸ் நிற்கும் முன்பே கீழே குதித்தோடி வருவான். அந்தநேரம் மினிபஸ்ஸின் வாசலருகே போய் நிற்கலாம். காசை போட்டுவிட்டு வந்தவன் வாசலை அடைத்து நிற்கும் சனத்தை, சிறிது நகரச் செய்து இவள் ஏற இடம் தருவான்.

இவள் நினைத்தது மாதிரியே ஒரு மினிபஸ்தான் இப்பொழுது வந்து நின்றது. கொண்டக்டர் கீழே குதித்து இறங்கி வந்தான். இவள் மினிபஸ் வாசலருகே போனாள். பஸ்ஸிற்குள் பலர் நின்றார்கள். ஆனாலும் இவள் கால்வைத்து உள்ளே ஏற இடமிருந்தது. ஏறினாள். உள்ளே றைவரின் சீற்றுக்கும் பயணிகள் சீற்றுக்குமிடையே சன்னலோடு சிறிது இடைவெளி புலப்பட்டது. கால்களை மெதுவாக நகர்த்தி அந்த இடத்திற்குள் தன்னைப் பொருத்திக் கொண்டுவிட்டாள்.

ஆனாலும் மினி பஸ் இன்னும் நகரவில்லை. கொண்டக்டர் இன்னும் வந்தேறவில்லை.

இவள் சன்னல் வழியே வெளியே பார்த்தாள். இதுவரை இவள் நின்ற அந்த கோயிலடியின் சூழல் சற்று வித்தியாசமான கோணத்தில் தெரிந்தது. யாரோ சைக்கிளை ஓட்டிக்கொண்டு றோட்டால் போனார்கள். டிறைவரும் சீற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. தன் பக்கத்துக் கதவைத் திறந்துகொண்டு அவனும் வெளியே போயிருக்கவேண்டும். இவள் மறுபக்க சன்னலால் எட்டிச் சனக்கூட்டத்தை விலத்திப் பார்த்தாள். றைவரும் கொண்டக்டரும் வைரவர் கோயிலை சுற்றிவந்துகொண்டிருந்தார்கள் என்ன நேர்த்தியோ?

மினி பஸ்ஸிற்குள் சனங்களெல்லாம் அப்படியே இருப்பது போலத் தெரிந்தது. இவளுக்கு தானும் அவர்களும் பஸ்ஸோடு மீள தனியே விடப்பட்டு விட்டது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது.



ஒரு குறிப்பு

## *எழுத்தாளர் கே. டானியல்* (1927-1986)

ஈழத்து தீண்டாமைக் கொடுமைகளை தனது எதார்த்தவாத எழுத்துக்கள் அனைத்திற்கும் கருப்பொருளாகக் கொண்டு, சாதி வேறுபாட்டாலும் வர்க்கவேறுபாட்டாலும் அல்லற்பட்ட மக்களுக்காக இலக்கியக்குரல் கொடுத்த ஈழத்தின் நவீன ஆக்க இலக்கிய படைப்பாளி.

இதுவரை ஏழு நாவல்களையும் மூன்று சிறுகதைத் தொகுப்புக்களையும் சில குறுநாவல்களையும் தந்துள்ள டானியல் மரணத்தின் முன்னர் 'சா நிழல்' என்றொரு குறுநாவலை எழுதியுள்ளதாக அறியமுடிகிறது. தீண்டாமைக்கெதிரான இலக்கிய முயற்சிகளைத் தவிர தீவிரமாக இயக்கச் செயற்பாடுகளையும் மேற்கொண்டவர். மாவோயிசச் சிந்தனைகளை ஏற்றுக்கொண்டு இயங்கியவர்.

யாழ்ப்பாணத்தில் பண்பாட்டுக் கோலங்களையும் அவற்றைப் பிரதிபலிக்கும் மொழியினையும் தனது படைப்புக்களிலே நன்கு கையாண்டவர்.

தமிழகத்தில் 'தலித்' எழுத்து முயற்சிகளின் முன்னோடியாகக் கருதப்பட்டு வருகின்றார். தலித்தியத்திற்கு இன்றுள்ள, அங்கீகாரம் எதுவும் இல்லாத காலகட்டத்திலே சாதீய இலக்கியம் படைப்பவர் என்ற குற்றச்சாட்டுக்கள் எவற்றுக்கும் அஞ்சாமல் நின்று செயற்பட்டவர்.

இவரின் எழுத்துக்கள் இன்று பல்கலைக்கழக மாணவர்களால் படிக்கப்படுகின்றன. ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

கடந்த 1993இல் இருந்து தமிழகத்தில் கடலூரில் இயங்கும் 'குரல்கள்' அமைப்பு டானியலின் பெயரில் தலித் எழுத்தாளர்களுக்கான பரிசில்களையும் வருடாந்தம் வழங்கி வருகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KADDAIVELY - NEL M. P. C. S. Ltd KARAVEDDY

# இடம் பெயர்ந்தோரின் இடர் களைவோம்

– எழில்மதி

மனிதன் மற்ற விலங்குகளைப் போல் அல்லாது அசுர வேகத்தில் முன்னேறி அரிய பல சாதனைகளைப் படைத்துக்கொண்டிருக்கிறான். மனிதன் கண்டு பிடித்த விஞ்ஞான விந்தைகள் எழுதி முடியாதது. எழுத்தில் அடங்காதது. இருப்பினும் மனித சமுதாயத்தில் காலங்காலமாகப் புரையோடிப் போய்க் கிடக்கின்ற கசப்புணர்வுகளும், வேற்றுமைகளும், பிரிவினைகளும் சமூக ஏற்றத்தாழ்வுகளும், சாதிப் பாகுபாடுகளும், இனப்பூசல்களும் பதவி மோகங்களும், மற்றும் இன்னோரன்ன பிரச்சினைகளும் மனிதனை மனித நேயம் உள்ளவனாக வாழ விடாது மிருகம்போல் வாழச் செய்கின்றது. எனவே இத்தகைய வேறுபாடுகள் யாவற்றையும் களைந்தெறிந்து எல்லா ஊரும் நமது ஊரேதான் என்ற புத்துயிர்ப்புள்ள மனித சமுதாயம் ஒன்றைக் கட்டி எழுப்ப அனைத்து மக்களும் அணிதிரண்டு முன்வரவேண்டும்.

இன்றைய காலகட்டம் மனித சமூகத்தை விழிப்படையச் செய்கின்ற ஓர் உயரிய நிலைக்குள் தள்ளிவிட்டிருக்கின்றது. நாட்டில் நடைபெறுகின்ற அசம்பாவிதங்கள் காரணமாக மக்கள் சகல உடமைகளையும் இழந்த நிலையில் இடம்பெயர்ந்து வந்துகொண்டிருக்கிறார்கள். இவர்கள் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி, வசிக்க வீடின்றி அலைந்து திரிகின்றார்கள். இவர்களின் நிலை கண்டு யாராவது இரங்குகிறார்களா? எமது கிராமங்களில் பணக்காரராக இருக்கும் வெளிநாட்டுச் செல்வச்சீமான்கள் இவர்களுக்கு ஒரு நேரச்சாப்பாடு கொடுத்து உதவுகிறார்களா? அல்லது நேரத்திற்கு நேரம் நவநாகரிக ஆடைகள் அணியும் இக்காலத்து மங்கையர்கள் மானமிழக்கும் பெண்களின் நிலைகண்டு கலங்குகின்றார்களா? அல்லது வசிக்க வீடின்றி அலையும் மக்களுக்கு வீடு கொடுத்து உதவுகிறார்களா? இல்லவே இல்லை. எனவே இவர்கள் அனைவரும் மனித நேயம் மிக்கவர்களாக மாறவேண்டும்.

செல்வச்சீமான்களே ஒரு கணம் சிந்தித்து முடிவெடுங்கள். பக்கத்து வீட்டில் ஏழைக்குடும்பம் பட்டினி கிடக்க நீங்கள் வேளைக்கு வேளை உண்டு மகிழ்வது சரியாகுமா. இடம்பெயர்ந்த மக்கள் கொட்டாவி விட நீங்கள் மூக்குமுட்டச் சாப்பிட்டுவிட்டு ஏப்பம் விடுவது நியாயமாகுமா? எனவே தவித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் இத்தகைய மக்களின் நிலைகண்டு பணக்காரர்கள் இரங்கவேண்டும். காணிகளை சாதாரணமக்கள் வாங்கமுடியாத அளவுக்கு உச்சக்கட்டமாக விலைகளை ஏற்றி வாங்கிவிட்டு அவற்றில் மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் அமைத்து வாழ்வதிலோ அல்லது கோயிற் கட்டடங்கள் கட்டுவதற்கு இலட்சக்கணக்கில் பணம் செலவழிப்பதிலோ எதுவித அர்த்தமும் இல்லை. எனவே நிலைதடுமாறி இருக்கும் நம் நாட்டு மக்களுக்கு உண்டிகொடுத்து உதவ அனைத்து செல்வர்களும் முன்வரவேண்டும். அதிகளவில் காணி வைத்திருக்கும் தனவந்தர்கள் காணி இல்லாத ஏழைஎளியவர்களுக்கு வீடு கட்டி வசிப்பதற்கு ஒரு பரப்புக் காணியாவது கொடுத்து உதவவேண்டும். கட்டியிருக்கும் வீடுகளை இடம்பெயர்ந்தோர் தங்கியிருப்பதற்கு கொடுத்துதவவேண்டும். நாம் பெருமளவில் பணத்தைப் பத்திரப்படுத்தி வைத்திருப்பதனால் எதுவித நன்மையும் ஏற்படப்போவதில்லை. எனவே இத்தகைய நற்கருமங்களை செய்வதற்கு வசதி படைத்த சகலரும் முன்வந்து உதவவேண்டும்





அண்மையில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக இடம் பெயர்ந்து வந்த மக்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுகின்றனர். அன்று வடமராட்சியிலுள்ள மக்களும் இடம்பெயர்ந்து சென்றனர். படாதபாடு பட்டனர். அன்றும்சரி இன்றும்சரி சாதி அடக்குமுறை மனித சமுதாயத்தை வாட்டி வதைத்துக்கொண்டே இருக்கின்றது. அன்று தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்து போனபோது கிணற்றினுள் கஞ்சல், குப்பைகளை அள்ளிவீசிவிட்டு தண்ணீர் அள்ளாது மறித்தனர். அதே நிலைதான் இன்று இங்கும் நிலவுகிறது. வீடு கேட்டால் சாதி என்ன என்று கேட்கிறார்கள். வீட்டைப் பூட்டி வைத்துக்கொண்டு தெருநீளம் அலைந்து திரியும் நிர்க்கதியான மக்களை வேடிக்கை பார்க்கும் சமுதாயமே இங்கு காணப்படுகின்றது. மனிதநேயமற்ற சிலர் வெளிநாடு சென்றவர்களின் வீடுகளைப் பிடித்து வைத்துக்கொண்டு தங்கள் வீடுபோல் சட்டம் பேசுகின்றனர். அந்த வீடுகளில் ஒரு வீட்டையாவது இடம்பெயர்ந்தவர்களுக்குக் கொடுக்க மறுக்கின்றார்கள். பொதுக்கிணறுகளில் தண்ணீர் அள்ளக்கூடாது, இடம்பெயாந்து வந்தவர்களுக்கு வீடு கொடுக்கக்கூடாது எனச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி அடக்குமுறை மிக இறுக்கமாகப் பேணப்படுவது சரிதானா என்பதை சற்று ஆராய்ந்து அறிய வேண்டும். நிச்சயமாக இந்த அடக்குமுறை பிழையானதாகும். இடம் பெயர்ந்து வருகின்ற மக்கள் தஞ்சமடைவதற்கு இடம் இல்லாது கஷ்டப்படும் போது நாம் எமது வீட்டின் ஒரு பகுதியையாவது கொடுத்து உதவவேண்டும். இல்லாவிட்டால் எங்காவது வீடு எடுத்துக் கொடுத்து உதவி செய்தல் வேண்டும். இதுவே மனிதநேயம் மிக்க நடவடிக்கையாகும்.

இடம் பெயர்ந்து வந்த மக்கள் பலர் அல்லலுற்றுத் தவித்துக்கொண்டிருக்கின்றனர். சிலர் செல்வச் செருக்கும் சாதிப் பாகுபாடும் காட்டி தாம் உயர்ந்தவர்கள், மேலானவர்கள் என இறுமாப்புப் பேசுகின்றார்கள். இவ்வாறு இடம்பெயர்ந்து வந்திருப்பவர்களுக்கு இங்கு இருக்கும் நாங்கள் ஏதாவது உதவி செய்தோமா? நான் பெரிய வீட்டில் வசித்து வந்தேன். என்னுடைய உடமைகள் எல்லாவற்றையும் இழந்த நிலையில் இங்கு வந்திருக்கின்றேன் எனக்குக் குடியிருப்பதற்கு வசதியான ஒரு வீடு எடுத்துத் தாருங்கள் என்று கேட்கிறார் ஒருவர். இன்னொருவரோ நான் பெருங்காணி பூமிகளுக்கு அதிபதியாக இருந்தேன். ஏக்கர் கணக்கில் தென்னந்தோட்டங்களும் நெல் வயல்களும் வைத்திருந்தேன். சகலவற்றையும் இழந்த நிலையில் ஒட்டாண்டியாக வந்திருக்கிறேன். எனக்கு கிணறு மலகூடம் என்பவற்றை உள்ளடக்கிய மிக வசதியான ஒரு வீடெடுத்துத் தாருங்கள் என்று கெஞ்சுகின்றார். வேறொருவர் நான் உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவன் இங்குள்ளவர்கள் என்ன வகுப்பைச்சேர்ந்தவர்களோ தெரியாது ஆகவே எனக்கு வசதியான ஓர் இடத்தில் வசதியான வீடு பெற்றுத் தருமாறு இறுமாப்புடன் கேட்கிறார். இத்தகைய நிலையில் வருபவர்களுக்கு நாம் எப்படி உதவி செய்ய முடியும். முதலில் இடம்பெயர்ந்து வருபவர்களுக்கு உணவு கொடுத்து களைப்பாற்றி ஓர் இடத்தில் தங்கவைக்க வேண்டியதே எமது கடமையாகும். இவ்வாறு செய்யமுற்படும்போது பல இன்னல்களையும், இடையூறுகளையும் சந்திக்கவேண்டி ஏற்பட்டது. வறுமையின் கொடுமையிலும் பசியின் கோரப்பிடியிலும் இருந்த மக்கள் கொடுத்த உணவை உண்டு மகிழ்ந்தனர். செல்வச் செருக்கு மிக்கவர்களும் சாதித் துவேசம் பிடித்தவர்களும் சமைத்துக் கொடுத்த உணவை உட்கொள்ள மறுத்தனர். முகாம்களில் தங்கியிருந்து வாழ்வதற்குக்கூட மறுப்புத் தெரிவித்தனர். இடம்பெயர்ந்து வரும்மக்கள் முதலில் தமது நிலையை மாற்றிக்கொள்ளவேண்டும்.

பளை, சாவகச்சேரிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துவந்த மக்கள் வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் வாழாத கிராமங்களே இல்லை எனலாம். முகாம்களிலும் பாடசாலைகளிலும் இவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். உணவு, உடை, உறைவிடம் போன்ற அடிப்படைத் தேவைகளை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஓரளவு நிறைவேற்றி வருகின்றன ஆனால் இவர்களது முக்கிய தேவைகள் சிலவற்றை எவரும் பூர்த்தி செய்வதாகத் தெரியவில்லை. கல்வி, பொருளாதார ரீதியாக இவர்கள் மிகவும் நசுக்கப்படுகின்றார்கள். இடம் பெயர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த மாணவர்களுக்கு சில பாடசாலைகளில் அனுமதி மறுக்கப்படுகின்றது. சில பாடசாலைகளில் அனுமதி வழங்கப்பட்டாலும் கூட அவர்களை வெறுந்தரையில் இருத்திக் கல்வி கற்பிக்கின்றார்கள். தங்கள் நிரந்தர மாணவர்களை கதிரையில் இருத்திப் படிப்பிக்கின்றார்கள். இந்த நிலை மாறவேண்டும். ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானாகவே வளரும் என்று கூறுவார்கள். அதன்படி இடம்பெயர்ந்து வந்த மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களைக் கதிரையில் இருத்திக் கல்வி கற்பிக்க வேண்டும். இந்த உயரிய பணியை ஒவ்வொரு பாடசாலைகளும் செய்து இடம்பெயர்ந்து வந்திருக்கின்ற மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு அயராது பாடுபட வேண்டியது மிக அவசியமான ஒரு பணியாகும்.

கிராமத்திற்குக் கிராமம் சமூகத்தை நல்வழிப்படுத்துவதற்கு சனசமூகநிலையங்களும், சமூகநிறுவனங்களும், பொது அமைப்புக்களும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஒரு கிராமத்தில் பல நிறுவனங்கள் இயங்குவதில் தவறில்லை. ஆனால் அவை இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்களுக்கு எந்தவகையில் சேவை செய்கின்றன என்பதை சற்று ஆராய்ந்து அறியவேண்டும். வெறுமனே பத்திரிகை போடுவதுதான் சனசமூக நிலையங்களின் பணி என்று கருதக்கூடாது. சனசமூக நிலையங்கள் தமது எல்லைப்பரப்பிலுள்ள இடம்பெயர்ந்து வந்திருக்கும் மக்களுக்கு சமூக, பொருளாதார, கல்வி, பண்பாட்டு ரீதியான ஒழுக்கம் முதலியவற்றை வளர்த்தெடுப்பதற்குரிய நன்மார்க்கங்களைச் செய்து கொடுக்கவேண்டும். ஆனால் சமூக அமைப்புக்கள் தமது நோக்கங்களிலிருந்து தவறிவிட்டன. பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இடம்பெயாந்து வந்திருக்கின்ற மக்களின் குறை நிறைகளை விசாரித்தறிந்து அவற்றை இயலுமானவரை தீர்த்துவைக்கவேண்டும். இடம்பெயர்ந்து வந்திருக்கும் மக்களும் நமது உறவினரே என்ற அந்த உயர்ந்த தத்துவத்தை சிரமேற்கொண்டு செயற்பட்டால் அவர்களின் குறைகளையும் தீர்த்துக்கொள்ளமுடியும்.

மனிதன் சிந்திக்கிறான். தன் சிந்தனை ஆற்றலைக்கொண்டு செயற்படுகின்றான். சிந்திக்கும் ஆற்றலும் செயற்படும் திறனும் மனித இனத்திற்கு மாத்திரம் உள்ள ஒரு தனிச்சிறப்பாகும். சிந்தனை ஆற்றலால் மனிதசமுதாயம் அரும்பெரும் சாதனைகளைப் படைத்துள்ளது. எவ்வளவுதான் மானிட சமூகம் முன்னேறினாலும் சில மனிதநேயப் பண்புகள் அறவே காணப்படுவதில்லை.

"தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை யெனில்-இந்த
ஜெகத்தினையே அழித்திடுவோம்"

என்ற பாரதியாரின் கனவை நனவாக்குவோம். ஏழை பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வை அழிப்போம். ஆண்டான் அடிமை என்ற பேதத்தை நீக்குவோம். தொழிலாளி, முதலாளி என்ற பாகுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவோம். எல்லா ஊரும் நமது ஊரே எல்லா மக்களும் நமது உறவினரே என்பதை உலகறியச் செய்வோம். எல்லோர்க்கும் ஒருவர், ஒருவருக்கு எல்லோரும் என்ற கூட்டுறவு முறையில் நாம் அனைவரும் செயற்படுவோம்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு -நம்மில்
ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு".






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த (உயர்தர) பொதுச் சாதாரண பரீட்சை,
மற்றும் சகல போட்டிப் பரீட்சைகளுக்குமான வழிகாட்டி.

உலகப்பார்வை

உளச்சார்பு

– சிவயோகச் செல்வன்





யசீர் அரபாத்

## ☞உலகப் பார்வை

## ☞ஒஸ்லோ ஒப்பந்தம்

பாலஸ்தீனர்களின் தாயகப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமுகமாக 1993ல் ஒஸ்லோ ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இவ் ஒப்பந்தத்தில் இஸ்ரேலின் அப்போதைய பிரதமர் யிட் ஷாத் ராபினும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்தும் கைச்சாத்திட்டனர். கைச்சாத்தான திகதியில் இருந்து ஆறுவருடகாலத்துக்குள் ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ள விடயங்களை நிறைவேற்றுவதென இணக்கம் காணப்பட்டது. ஆயினும் பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் இருந்தும் காஸாவில் இருந்தும் ஒரு குறிப்பிட்ட இஸ்ரேலியப் படையினர் வாபஸ் பெறப்படுவதற்குத்தான் இவ்வொப்பந்தம் உதவியுள்ளது. இவ்வொப்பந்தத்தில் உள்ள பலவிடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவ்வொப்பந்தத்தை எட்டுவதற்குரிய ஏற்பாடுகளை நோர்வே நாடு மேற்கொண்டிருந்தது.

## ☞G-8 அமைப்பு (Group-8)

உலகத்திலே மிகக்கூடிய அளவில் கைத்தொழில் துறையில் அபிவிருத்தியடைந்துள்ள ஏழு நாடுகள் இணைந்து G-7 அமைப்பை உருவாக்கின. இதன் உச்சிமாநாடு ஆண்டுக்கு ஒரு தடவை இடம்பெறுகின்றது. தற்போது ரஸ்யா இவ் அமைப்புடன் இணைந்துள்ளதால் இது G-8 எனப்படுகின்றது. இவ் அமைப்பில் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ரஸ்யா, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ☞ ஆதர் சி. கிளார்க்

வானியல் ஆய்வாளரான ஆதர்.சி.கிளார்க் இலங்கைப் பிரஜாவுரிமை பெற்று இலங்கையில் வாழ்ந்து வருகின்ற பிரித்தானியர் ஆவார். இன்றைய செய்மதி, தகவல் தொடர்பு நுட்பத்திற்கு வித்திட்டது 1945ல் Wireless World என்ற சஞ்சிகைக்கு அவர் எழுதிய கட்டுரையேயாகும். 2001 விண் வெளிப்பயணம் 2010 இரண்டாவது விண்வெளிப்பயணம் என்ற அவரது நூல்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. இதுவரை 37 அறிவியல் நூல்களை இவர் எழுதியுள்ளார். விஞ்ஞான புனைகதை எழுத்தாளரான கிளார்க் விண்வெளித்தகவல் விருது, பாத் பல்கலைக்கழக பேராசிரியர் பட்டம், லிவர்பூல் பல்கலைக்கழகப் பேராசிரியர் பட்டம், இலங்கை ஜனாதிபதி விருது உள்ளிட்ட பல விருதுகளையும் பட்டங்களையும் பெற்றவர். தவிர 2000 ஆண்டு இவருக்கு பிரித்தானிய அரசு சேர்பட்டம் வழங்கி கௌரவித்தது.

### ☞ சிம்லா உடன்படிக்கை

1971ல் பங்களாதேஸ் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மூண்ட போரில் இந்தியா வெற்றியீட்டியதைத் தொடர்ந்து 1972 யூலையில் இமாச்சலப்பிரதேசத்தின் தலைநகரான சிம்லாவில் 'சிம்லா' உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இவ்வுடன்படிக்கையின் பிரகாரம் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான எல்லைக்கோடு உறுதிப்படுத்தப்பட்டது. இவ் எல்லைக்கோட்டை இரு நாடுகளும் மதித்து நடக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது..

20ம் நூற்றாண்டின் சிறந்த வீரர்கள் (சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தெரிவு)

* சிறந்த உதைபந்தாட்ட வீரன் - பேலே(நடந) பிறேசில்
* குத்துச்சண்டை வீரன் - முகமது அலி-அமெரிக்கா
* டென்னிஸ் வீராங்கனை - ஸ்ரெபிகிறாப்-ஜேர்மனி
* கூடைப்பந்தாட்டம் - மைக்கல் ஜோர்டன்-அமெரிக்கா
* ஜிம்னாஸ்ரிக் - நடியா கோ மென்ஸி-ருமேனியா
* அதிவேக ஓட்டவீரர் - கார் லூயிஸ்-அமெரிக்கா.
* நீச்சல் - டோன் பிரேஷர்-அவுஸ்திரேலியா
* கிறிக்கெட் - பிரட்மன் - அவுஸ்திரேலியா

### ☞ அன்னை தெரேசா

யூகோஸ்லாவியாவில் அல்பேனியப் பெற்றோருக்கு மகளாக அக்னேஸ் கொன்வா பெஜாகியூ என்ற பெயருடன் 1910 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 27ஆம் தினதி அன்னை தெரேசா பிறந்தார். தனது 19 வயதில் கல்கத்தாவில் புனிதமேரி பள்ளியை இவர் நிறுவினார். 1948இல் இந்திய அரசு இவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அன்னை தெரேசா


நீச்சல் வீரர் டோன் பிரேஷர்





பிரஜா உரிமை வழங்கி கௌரவித்தது. 1979ஆம் ஆண்டு உலக அமைதிக்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. இவர் இழிபிறப பாளர்களின் துணைவி என அழைக்கப் படுகின்றார்.

☞Nato-(North Atlantic Treaty of Organization)

**வட அத்திலாந்திக் ஒப்பந்தம்**

இவ்வொப்பநதம் 1949 சித்திரை மாதம் 04ந் திகதி கைச்சாத்திடப்பட்டது. இதன் ஆரம்ப உறுப்பு நாடுகள் பெல்ஜியம், கனடா, டென்மார்க், பிரான்ஸ், பிரிட்டன், ஐஸ்லாந்து, இத்தாலி, லக்ஸம்பேர்க், நெதர்லாந்து, நோர்வே, போத்துக்கல், அமெரிக்கா ஆகியன ஆகும். கூட்டு இராணுவப் பாதுகாப்பே இதன் நோக்கமாகும். இரண்டாவது உலக மகாயுத்த முடிவில் சோவியத் யூனியன் தமக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக மேற்கு நாடுகள் கருதின. மற்றும் ஓர் உலக மகாயுத்தம் மூளும் நிலை ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பினால் 1947ஆம் ஆண்டு பிரித்தானியாவும், பிரான்சும், டென்கிர்க் ஒப்பந்தம்(Dunkirk Treaty) என்ற பெயரில் முதல்தடவையாக ஓர் ஒப்பந்தத்தை செய்தன. நேட்டோ ஒப்பந்தம் உருவாவதற்கு முதல்படியாக அமைந்தது இந்த ஒப்பந்தமேயாகும்.

**☞தேசிய கீதம்**


உலகிலேயே மிக நீளமான தேசிய கீதம் கிரேக்க நாட்டு தேசிய கீதமேயாகும். இது 128 வரிகளைக் கொண்டது. மிகவும் சிறியது ஜப்பான் நாட்டுத் தேசிய கீதமாகும். இது 04 வரிகளைக் கொண்டது. இதுவே உலகின் முதற் தேசியகீதமாகும். இது 9ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது.

**☞பாலைவனப்புயல் நடவடிக்கை**

1991இல் அமெரிக்கா, பிரித்தானியா, பிரெஞ்சு நாடுகளைச் சேர்ந்த சுமார் மூன்று லட்சம் துருப்புக்களால் ஈராக் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கை பாலைவனப் புயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சதாம் ஹுசைன்

நடவடிக்கை எனப்படுகின்றது. குவைத்தை, ஈராக் ஆக்கிரமிப்புச் செய்ததால் இந் நட வடிக்கை மேற் கொள்ளப்பட்டது. இதனால் குவைத் விடுவிக்கப்பட்டது. இந் நடவடிக்கை மேற் கொள்ளப் பட்ட போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் ஜோர்ஜ்புஷ் ஆவார். ஈராக்கிய ஜனாதிபதியாக இருந்தவர் சதாம்ஹுசைன் ஆவார்.

### ☞ஆசிய விளையாட்டுப் போட்டி

ஆசிய விளையாட்டுப் போட்டி 1951ல் புதுடில்லியில் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது 6 விளையாட்டுக்கள் மாத்திரமே இடம்பெற்றன. 11 நாடுகள் இப்போட்டியில் பங்கு கொண்டன. 1998ல் நடைபெற்ற போட்டியில் 36 விளையாட்டுக்களில் 41 நாடுகள் பங்குகொண்டன. இப்போட்டி பாங்கொக்கில் இடம்பெற்ற 13வது ஆசிய விளையாட்டுப் போட்டியாகும். இப்போட்டிகளில் இலங்கையரான தமயந்தி தர்ஷா 200மீற்றர், 400மீற்றர் தூர ஓட்டத்தில் 1ம் இடத்தையும் சுகத் திலகரட்ணா 400மீற்றர் ஓட்டத்தில் 1ம் இடத்தையும் பெற்றனர். 14வது போட்டி தென் கொரியாவில் 2002இல் இடம்பெறவுள்ளது.

### ☞விண்வெளி ஆய்வுகள்

* நவீன விண்வெளி யுகத்தின் தந்தையென அழைக்கப்படுபவர் சியோல் கோல்ஸ்டி.
* 1997இல் செவ்வாய்க்கு பாத்பைண்டர் என்ற வாகனம் அனுப்பப்பட்டது. இதில் சக்திமிக்க கமரா பொருத்தப்பட்டுள்ளது. இக்கமராவை தயாரித்தவர் இலங்கை விஞ்ஞானியான சரத் குணபால என்பவராவார்.

### ☞ஓசோன் படை

வளிமண்டலத்தின் அதி கீழ்ப் படையான மாறன் மண்டலத்திற்கும் மாறன் மண்டலத்திற்கு மேல் உள்ள படை மண்டலத்திற்கும் இடையில் உள்ள மெல்லிய சவ்வு போன்ற படையே ஓசோன் படையாகும். அது ஓசோன்($O_3$) வாயுவால் ஆனது. ஓசோன் படை சூரிய ஒளியிலிருந்து வருகின்ற அல்ட்ரா வயலட் கதிர்களைத் தடுக்கின்றது. இவ் ஓசோன் படையில் தற்போது துவாரம் ஏற்பட்டுள்ளது. இதனால் புவியின் வெப்பநிலை அதிகரிக்கின்றது. குளோரோ புளோரோ காபன்தான் ஓசோன் படையில் துவாரம் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ☞சார்க் – தென்னாசிய பிராந்திய ஒத்துழைப்பு(SAARC)

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஸ், மாலைதீவு, நேபாளம், பூட்டான் ஆகிய ஏழுநாடுகள் சார்க்கில் அங்கம் பெறுகின்றன. இது தென்னாசியாவின் பொருளாதார, சமூக, ஒத்துழைப்பு நிறுவனமாகும். இவ்வமைப்பு 1985இல் பங்களாதேஸ் முன்னாள் ஜனாதிபதி ஸியாவுர் ரகுமான் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது சார்க் உச்சிமாநாடு 1985ல் டாக்காவில் நடந்தது. இதன் தலைமையகம் நேபாளத்தில் உள்ளது.

### ☞அமர்த்தியா சென்

இந்தியாவின் மேற்கு வங்காள பொருளியல் அறிஞரான அமர்த்தியாசென் பொதுநல பொருளியல் ஆராய்ச்சியாளர். இவ் ஆய்வுக்காகவும் பட்டினிக்கு எதிரான போர் என்ற அவரது நூலுக்காகவும் 1998ல் நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட்ட நாடுகளில் உணவுப்பஞ்சம் பெருமளவு ஏற்படவில்லை. சர்வாதிகார, குடியேற்றவாத இராணுவ ஆட்சிகள் நடைபெற்று வரும் நாடுகளிலேயே பல சந்தர்ப்பங்களில் உணவுப்பஞ்சங்கள், பட்டினிச்சாவுகள் ஏற்பட்டுள்ளன என்று குறிப்பிடும் சென், பட்டினியை நீக்கும் பல உபாயங்கள் பற்றி விரிவாக ஆய்வு செய்துள்ளார்.

### ☞பரிசோதனைக் குழாய்க் குழந்தை.

முதலாவது பரிசோதனைக் குழாய்க் குழந்தை 1978 ஆடி 25ம் திகதி இங்கிலாந்தில் பிறந்தது. இலங்கையில் முதற் சோதனைக் குழாய் குழந்தை 1999 கார்த்திகை மாதம் 10ஆம் திகதி பெறப்பட்டது. மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி சிவராஜா என்பவர் இக்குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார். பம்பலப்பிட்டி நியூலங்கா மருத்துவ மனையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

### ☞எல்நைனோ (EL-NINO)

பூமத்திய ரேகையின் மத்திய மற்றும் கிழக்குப்பகுதியிலுள்ள பசுபிக் சமுத்திரப் பிராந்தியங்களில் கடல் நீரின் மேற்பரப்பில் இடையிடையே ஏற்படுகின்ற உஸ்ண நிலையும் அதன் விளைவும் எல் நைனோ எனப்படுகின்றது. எல் நைனோ ஆனது சூழலில் முக்கியமாக வெப்பநிலையில் படிப்படியான மாற்றங்களையும் உலகின் பல்வேறு பகுதிகளில் திடீர் மழைவீழ்ச்சி, வரட்சிஎன்பவற்றையும் ஏற்படுத்தி விவசாயத்துறை, நீர்மூல வளங்களில் சாதகமான அல்லது பாதகமான விளைவுகளை உருவாக்கும். பசுபிக் சமுத்திரக் கடல் மேற்பரப்பில் உள்ள காற்று பூமத்திய ரேகையை நோக்கிக் கிழக்கிலிருந்து மேற்காக வீசிக்கொண்டிருக்கும் போது இந்தோனேசியா மற்றும் அவுஸ்திரேலியா உப கண்டத்தினை அண்டிய பகுதிகளில் உள்ள நிலைக்குத்தான மேற் தொகுதி கடல்நீர் உஷ்ணமாகின்றது. இதன் காரணமாக இப்பிரதேச வளிமண்டல வாயுக்கள் உஸ்ணமடைகின்றன.இதனால் அதிக மழைவீழ்ச்சி, வெள்ளப்பெருக்கு, கடும் வரட்சி, காட்டுத்தீ, புயல் போன்றவை ஏற்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞லா~நினா (LA_NINA)

இது எல்நைனோவின் சகோதரி என வர்ணிக்கப்படுகின்றது. எல்நைனோவுக்கு நேர் எதிரான தன்மையுடையது. பசுபிக் சமுத்திரப்பிராந்தியத்தில் வழமைக்கு மாறான குளிர்ந்த கால நிலை ஏற்படுவதே லாநினோ எனப்படுகின்றது. மத்திய கோட்டை அண்டிய பசுபிக் பிராந்திய நாடுகளில் லாநினாவின் தாக்கம் அதிகளவில் ஏற்படுகின்றது.

☞அணுக்குண்டு

யுரேனியம் எனும் கனிமத்தை சக்தி ஆற்றலாக மாற்றுவதே அணுகுண்டின் அடிப்படைத் தத்துவமாகும். யுரேனியத்தின் அணுக்கருவைப் பிளப்பதால் அளவிடற்கரிய ஆற்றலை உண்டாக்கமுடியும் என்ற அடிப்படையில்தான் அணுக்குண்டு தயாரிக்கப்படுகிறது. அமெரிக்க விஞ்ஞானியான ஜே.ஆர்.ஓபன் ஹீமர் என்பவரே முதலில் அணுகுண்டைத் தயாரித்து 1945ல் சோதனையும் நடத்தியவர். இக்குண்டு வெடித்தபோது 12 ஆயிரம் மீட்டர் உயரத்திற்கு மேல் வெப்பப் புகைமண்டலம் எழும்பியது. 1945ம் ஆண்டு ஆவணிமாதம் 6ம் திகதி அமெரிக்க அணுகுண்டுவீச்சுக்கு யப்பானின் ஹிரோஷிமா நகர் இலக்கானது.

☞தென்னாசிய முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் (SAPTA)

சார்க் அமைப்பில் அங்கத்துவம பெறும் நாடுகள் இவ் ஒப்பந்தத்தை ஏற்படுத்தின. இதன்படி அங்கத்துவ நாடுகளிடையே தீர்வைகள் குறைக்கப்பட்டு இந்நாடுகளின் பொருட்களை இறக்குமதி செய்ய முன்னுரிமை வழங்கப்பட்டது. இதன் வளர்ச்சியாக தென்னாசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (SAFTA) 2002ஆம் ஆண்டு முதல் அமுலுக்கு வருகின்றது. இதன்படி இந்நாடுகள் தீர்வையின்றி ஏற்றுமதி இறக்குமதிகளைச் செய்யமுடியும்.

☞டங்கன் வைற்

1948இல் லண்டனில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பாக 400மீற்றர் தடைதாண்டல் போட்டியில் பங்குபற்றி வெள்ளிப்பதக்கத்தை இலங்கைக்குப் பெற்றுக்கொடுத்தார். இவருக்கு 1998இல் இலங்கை ஜனாதிபதி தேசமானிய விருது வழங்கிக் கௌரவித்தார்.


☞கடந்த 1000 வருடங்களில் சரித்திரம் படைத்த சாதனையாளர்கள்
(ரரய்ட்டர் செய்தி நிறுவனத்தின் தெரிவு)

1ம் இடம்:~ அலபர்ட் ஐன்ஸ்டீன்

இவர் ஜேர்மனிய தேசத்தில் பிறந்து ஹிட்லரின் ஆட்சியில் கொடூரம் காரணமாக அமெரிக்காவிற்குப் புலம் பெயர்ந்தவர். அணுப்பிளவின் பாரிய சக்தி வெளிப்பாட்டைக் கண்டுபிடித்த ஐன்ஸ்டீன் அமெரிக்க அரசால் கேட்கப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட அணுகுண்டை கண்டுபிடிக்க மறுத்த மனிதநேயமிக்க விஞ்ஞானி. அணுசக்தியை ஆக்க சக்தியாக்கக்கூடிய பல ஆராய்ச்சி களை மேற்கொண்டவர் இவர். 1921ல் அவர் நோபல் பரிசைப் பெற்றார்.




☞2ம் இடத்தில் இருவர்

**கார்ல்மாக்ஸ்**

இவர் ஜேர்மனிய தேசத்தை சேர்ந்தவர். ஓர் சமூக விஞ்ஞானி. இவர் ஏங்கிள்ஸ் என்பவருடன் சேர்ந்து கம்யூனிஸ்ட் அறிக்கை (Communist Manifesto) என்னும் நூலை வெளியிட்டார். தாஸ் மூலதனம் (Das Kapital) எனும் நூலையும் வெளியிட்டார். ஜனநாயக சோசலிசம், கம்யூனிச புரட்சி போன்றவற்றின் நாயகராக இவர் விளங்குகின்றார்.




☞மகாத்மா காந்தி

இந்திய தேசத்தைச் சேர்ந்தவர். இந்தியாவிற்கு ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தவர். இவர் எழுதிய சத்தியசோதனை என்ற நூல் சர்வதேச ரீதியாகப் பிரபலமானதாகும்.

☞குளோனிங்

விலங்கின் கலமொன்றில் இருந்து இனக்கலப்பில்லாமலே புதிய விலங்கொன்றை உற்பத்தி செய்யும் முறையே குளோனிங் எனப்படுகின்றது. எந்தவொரு கலத்திலும் முழுவிலங்காக உருவாகுவதற்கான சகல அம்சங்களும் உள்ளன. ஆனால் அவ் அம்சங்கள் யாவும் தடைசெய்யப்பட்டு அக்கலம் எந்த உறுப்புக்குரியதோ அவ்வியல்புமட்டும் வெளிக்காட்டப்படுகின்றது. இக்கலங்கள் Memmory Cells எனப்படுகின்றது. இக் கலங்களின் செயற்பாட்டினை குலைத்துவிடுவதால் Ouiscent Cell என அழைக்கப்படும் கலம் உருவாகின்றது. இப்படியான கலங்களின் நிறமூர்த்தங்கள் புதிய கட்டளைகளை ஏற்றுச் செயற்படுகின்றன. இம்முறைமூலம் டோலி என்ற செம்மறி ஆடு உருவாக்கப்பட்டது. ஸ்கொட்லாந்து ஆராய்ச்சியாளர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டார்கள். குளோனிங் மூலம் மனிதர்களையும் உருவாக்க முடியும். இருப்பினும் அம்முயற்சி சர்வதேச ரீதியாக தடை செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது உளச்சார்பு – 01.

1. தொட்டியொன்றினுள் 10 பங்கு நீர் இருந்தது. தொட்டியில் இருந்து 18 லீற்றர் நீரை எடுத்தபோது ஏனையது $^{1}/_{4}$ பங்காகியது. தொட்டியின் கொள்ளளவு யாது?

2. திரைப்பட மாளிகை ஒன்றில் எழுபதிற்கும், குறைவான ரசிகர்கள் இருந்தனர். ரசிகர்களில் இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் என்போர் இருந்தனர். இளைஞர்களிலும் இருமடங்கு யுவதிகள் இருந்தனர். மாளிகையில் யுவதிகள் நான்கு நான்கு பேர்களாக இருந்தார்கள். சிறுவர்களின் தொகை யுவதிகளின் தொகையிலும் நான்கு குறைவானதாகும். சிறுவர் பிரிவுகள் ஒவ்வொன்றும் ஆறுபேர்களைக் கொண்டதாக அமர்ந்திருந்தனர்.
   1) திரைப்பட மாளிகையில் எத்தனை இளைஞர்கள் இருந்தார்கள்?
   2) திரைப்பட மாளிகையில் இருந்த சிறுவர்களின் எண்ணிக்கை யாது?

3. மணித்தியாலத்திற்கு 80 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் ஒரு மோட்டார் சைக்கிளின் அரைவாசி வேகத்தில் ஒரு குதிரை ஓடுமாயின் 6நிமிடங்களில் அது எவ்வளவு தூரம் ஓடியிருக்கும்?

4. சாவகச்சேரியிலிருந்து வவுனியா வரையிலான தூரம் 80மைல்களாகும். பஸ்வண்டியொன்று இந்த 80கிலோ மீற்றர் தூரப் பயணத்தை $2^{1}/_{2}$ மணித்தியாலங்களில் பூர்த்தி செய்கின்றது. ஒவ்வொரு அரை மணித்தியாலமும் சாவகச்சேரியில் இருந்து வவுனியாவிற்கும், வவுனியாவில் இருந்து சாவகச்சேரிக்கும் பஸ்வண்டிகள் புறப்படும். இவ்வண்டிகள் எங்கும் நிறுத்தப்படாமல் பயணங்கள் பூர்த்தி செய்யப்படுகின்றன.இந்த பஸ்வண்டிச்சேவை காலை 5.30மணிக்கு ஆரம்பமாகும். சாவகச்சேரியில் இருந்து வவுனியா செல்லும் கடைசி பஸ்வண்டியும் இரவு 9-30மணிக்குப் புறப்படும்.

5. ஒரு நாளில் இப்பஸ்வண்டிகள் சாவகச்சேரியிலிருந்து வவுனியாவுக்கு எத்தனை முறைகள் செல்கின்றன?

6. வவுனியாவிலிருந்து ஒரு பஸ்வண்டி காலை 6.00மணிக்குப் புறப்பட்டு பழுதுபட்டு நின்றதன் காரணமாக பயணம் 1மணித்தியாலம் 10நிமிடங்கள் தாமதமாகியது. குறித்த பஸ்வண்டி சாவகச்சேரியை அடைவதற்கு எடுத்த நேரத்தில் வவுனியாவிலிருந்து சாவகச்சேரிக்கு எத்தனை பஸ்வண்டிகள் புறப்பட்டிருக்கும்.

7 சாவகச்சேரியிலிருந்து காலை 10.30 மணிக்குப் புறப்படும் பஸ்வண்டி ஒன்றினை வவுனியாவிலிருந்து புறப்படும் எத்தனை பஸ்வண்டிகள் வழியில் சந்திக்கும்?

தொடக்கம் 12வரையான வினாக்கள் கீழே தரப்பட்டுள்ள சட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை. தரப்பட்டுள்ள சொற்களின் அதே கருத்துச் சொற்கள் இச்சட்டத்தில் தரப்பட்டுள்ளன. அவற்றை இனங்கண்டு புள்ளிக்கோட்டில் எழுதுக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நி | கி | வெ | ளி | ச | ய | டை | ம் |
| ரு | தே | சி | க | ன் | த | ப | ன் |
| ப | ச | செ | ட | ண் | ல் | ச | கி |
| ம் | ப | தி | ம | சி | ய | வு | ம் |
| யோ | ப | சி | ர | உ | சை | ஆ | மி |
| ச | மு | தி | ப | ழ | சீ | ய | ம் |
| க | ம | வு | தா | து | மே | ழி | ர |
| மு | தை | ய | யா | க் | கை | வெ | ரை |
| ச | ர | ள | மி | டி | மை | தி | க |
| வ | ற | ழி | டு | வை | ஞா | ம் | பு |
| து | தை | வீ | தெ | வு | ரி | சு | பி |

7. கலப்பை ........................
8. வறுமை ........................
9. குரு ........................
10. சிங்கம் ........................
11. உடல் ........................
12. கடிதம் ........................

தரப்பட் சொல்லின் இரு வேறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்தும் இரு சொற்களைத் தெரிந்து அவற்றின்கீழ் கோடிடுக.

13. குரம்பை அ) வறுமை ஆ) நோய் இ) உடல் ஈ)பறவைக்கூடு.
14. கோதை அ) பாட்டி ஆ) பூமாலை இ) பெண் ஈ) மூர்க்கம்.
15. வரை அ) மலை ஆ) கலக்கம் இ) மலை ஈ) தெய்வப்பெண்
16. அரம்பை அ) மலை ஆ) இரவு இ) வாழை ஈ) தெய்வப்பெண்

கீழ்வரும் சொற்களுள் ஒரு சொல் ஏதோ ஒருவகையில் வேறுபடுகின்றது. அச்சொல்லின் கீழ் கீறிடுக.

17. 1) அகலம் 2) உயரம் 3) தூரம் 4) பாரம் 5) நீளம்
18. 1) கிழித்தல் 2) உடைத்தல் 3) வெட்டல் 4) வளைத்தல் 5) துருவுதல்
19. 1) சிரித்தல் 2) அழுதல் 3) பயப்படுதல் 4) நடத்தல் 5) வெறுத்தல்
20. 1) சந்தை 2) கழகம் 3) சேனை 4) சங்கம் 5) சிலை
21. 1) இலை 2) வாள் 3) மண்வெட்டி 4) மாடு 5) பாம்பு

கீழே தரப்பட்டுள்ளவற்றை நன்கு அவதானித்து விடை தருக.

22. SKY LAB என்பது FRIDAY ஆயின் DARIFY என்பது எவ்வாறு அமையும்?
23. FLEE FOR LIFE என்பது HOIJ HRV NLJJ ஆயின் TAKE CARE என்பது எவ்வாறு அமையும்?

மூன்று அங்குல உயரம், நீளம், அகலம் கொண்ட கனவடிவமான மரக்கட்டை ஒன்று எல்லாப் பக்கமும் நிறந்தீட்டப்பட்டு ஒரு அஞ்குல கனவடிவில் 27 துண்டுகளாக வெட்டப்பட்டது. அவ்வாறெனின்.

24. மூன்று பக்கங்களும் நிறந்தீட்டப்பட்ட துண்டுகள் எத்தனை?
25. இரண்டு பக்கங்களும் நிறந்தீட்டப்பட்ட துண்டுகள் எத்தனை?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


26. ஒரு பக்கம் நிறந்தீட்டப்பட்ட துண்டுகள் எத்தனை?

33. ஒருபக்கமும் நிறந்தீட்டப்படாத துண்டுகள் எத்தனை?


27

பின்வருவனவற்றை அவதானித்து வினாவிற்கான விடைகளைத் தருக.


28.




29.




30.





31.

| | | | |
|---|---|---|---|
| 8 | 10 | 6 | 12 |
| 9 | 11 | 7 | 13 |
| 14 | 11 | 19 | ☐ |

32.

| | | | |
|---|---|---|---|
| 10 | 12 | 6 | 5 |
| 12 | 18 | 10 | 5 |
| 25 | 15 | 14 | ☐ |

33. பின்வரும் வரைபடத்தில் எத்தனை முக்கோணங்கள் உள்ளன?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 34. | 46 | 62 | 24 |
| | 19 | 93 | 31 |
| | 37 | 75 | 53 |
| | 24 | ? | 32 |


| | | | |
|---|---|---|---|
| 35. | 4 | 8 | 6 |
| | 6 | 2 | 4 |
| | 8 | 6 | ? |

36. ஒரு பாத்திரத்தில் உள்ள அரிசி ஒவ்வொரு நிமிடமும் இரட்டிப்படையும். ஒரு மணித்தியாலத்தில் அப்பாத்திரம் நிரம்பி விட்டது. அப்பாத்திரத்தின் அரைவாசி எவ்வளவு நிமிடங்களில் நிரம்பியிருக்கும்?


கீழேதரப்பட்டுள்ள எண்களில் அடுத்து வரவேண்டிய எண்ணைத் தருக.

37. 9, 7, 14, 11, 33, 29, ......
38. 3, 6, 24, 144, 1152, .......
39. 1, 4, 9, 16, 25, ........
40. 3, 6, 5, 10, 8, 16, .......
41. 4, 14, 40, 78, ........
42. 3, 11, 35, 107, .......
43. 5, 10, 8, 24, 21, 84, .......

44.




45. இவ்வரை படத்தில் எத்தனை முக்கோணங்களை இனங்காணலாம்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது உளச்சார்பு-01

விடைகள்

1. 48லீற்றர்
2. 14 இளைஞர்கள்
3. 4 கிலோமீற்றர்கள்
4. 32+1= 33 முறைகள்
5. 6.30 தொடக்கம் 9.40வரை 7பஸ்கள்
6. 9 பஸ்கள்
7. மேழி
8. மிடிமை
9. தேசிகன்
10. சீயம்
11. யாக்கை
12. நிருபம்
13. உடல், பறவைக்கூடு
14. பூமாலை, பெண்
15. மூங்கில் மலை
16. வாழை, தெய்வப் பெண்.
17. பாரம்.
18. வளைத்தல்
19. நடத்தல்
20. சிலை
21. மண்வெட்டி
22. LAKYSB
23. VDOJEDVT-
24. 08
25. 12
26. 06
27. 01
28. 8
29. 48
30. 06
31. 6
32. 6
33. 20
34. 43
35. 7
36. 59 நிமிடங்களில்
37. 116
38. 11520
39. 36
40. 13
41. 76
42. 323
43. 80
44. 275
45. 19

"தேசிய இலக்கியம் என்பது, அது சமூகத்தை மாற்றி புதியதாய் அமைக்கவேண்டும் என்னும் இலட்சியத்தைக் கொண்டதாயும் உள்ளது. சமுதாய மாற்றத்திற்குப் பாடுபடும் பணியிலேயே சகலவிதமான ஜனநாயக இயக்கங்களுடனும் போராட்டங்களுடனும் அது தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்கின்றது. சாதியொழிப்புப் போராட்டத்திலிருந்து கிராமியக் கலைகளில் மறுமலர்ச்சி- புத்துயிர்ப்பு வரையிலான எண்ணற்ற செயல்களுடன் தேசிய இலக்கியம் நெருங்கிய உறவு கொண்டிருக்கிறது.

**(இலக்கியச் சிந்தனைகளில்......... க.கைலாசபதி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களூர்க் கல்யாணம்

—எஸ்—குணேஸ்

எங்களூர்க் கலியாணத்திற்கு
பெண்கள் ஆராத்தித் தட்டெடுத்து
வரிசையாய்ச் செல்வதுண்டு

காஞ்சிபுரம் முதல்
விதம் விதமாய் உடுத்தி
தலைநிறையக் கனகாம்பரம் புனைந்து
முகம் மலர்ந்த சிரிப்போடு
எங்களூர்ப் பெண்கள்
தட்டெடுத்துச் செல்வதுண்டு.



கமராக் கண்கள் கவனமாய்ப் படம்பிடிக்க
மெல்லிய வெள்துகில் மூடிய தட்டுக்களுடன்
தாலி, பணியாரம், கொழுக்கட்டை வரை
வரிசையாய்
பெண்கள் ஏந்திச் செல்வதுண்டு.

இப்போதும் அடிக்கடி
மணமக்கள், சீர்வரிசை ஏதுமின்றி
ஆராத்தித் தட்டுப்போல் வரிசைகளை
நாம் காண்பதுண்டு.

துறைமுகத்தில்
சரக்குக் கப்பல் தரித்துவிட்டால்
வல்லைவெளி தாண்டி வரிசையாய்ச் செல்லும்
'லொறி'களைக் காணும்போதெல்லாம்
எங்களூர்க் கலியாண வீடுகளே ஞாபகம்.

மிக மெதுவாக நடந்து செல்லும்
நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்போல்
எங்களூர் லொறிகளும்
வல்லைவெளி தாண்டிச் செல்லும்

ஆனால் ஒரு வித்தியாசம்தான்
எங்களூர்க் கலியாண வீடுகளோ
நிச்சயித்த நாளில் நடக்கும்.
ஆனால் எங்களூர் லொறிகளோ
நினைத்தவுடன் வரிசையாய்ச் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்த நிலை மாறுமா?

~நவீனன்~

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இறப்பது திண்ணம். இதையாருமே மாற்றமுடியாது. இறப்பதற்கு வயதெல்லையும் கிடையாது. இந்த நிலையில் மனித இறப்பிற்கு இளமை, மூப்பு என்ற வித்தியாசம் இல்லை. எனவே மனித இனம் வாழும் பருவத்தில் இன்பமாக வாழவேண்டும். இன்பமான மனிதவாழ்விற்கு உயர்ந்த குணநலன்கள் அவசியமாகும். உயர்ந்த குணநலன்களில் ஒற்றுமையும் ஒன்றாகும். நினைவு, சொல், செயல் ஆகியவற்றில் வேறுபடாதவர்களாய் ஒன்றுபட்டு நடத்தலை ஒற்றுமை எனக்குறிப்பிடலாம். இதற்கு மாறாக ஒருவரோடு ஒருவர் வேறுபட்டவர்களாக வேற்றுமை உணர்வுடன் வாழ்வதையே பெரும்பாலும் காண்கின்றோம். இந்தநிலை எப்போது மாறும் என்பதே கேள்விக்குரிய விடயமாகும்.

"நல்லறமும் ஒற்றுமையும் நாட்டில் செழிப்படைய
இல்லறமே ஏற்ற நிலம்"

என்றார் சுவாமி சிதம்பரனார். கணவனும் மனைவியும் இணைந்து நடாத்துகின்ற வாழ்விலே ஒற்றுமை என்னும் உயர்ந்த தத்துவம் மேலோங்கி இருத்தல் அவசியம் என்பதை அவர் வலியுறுத்துகின்றார். இல்லத்திலே கணவனும் மனைவியும் நினைவாலும், சொல்லாலும் செயலாலும் ஒன்று பட்டவர்களாக திகழவேண்டும். அப்போதுதான் ஒற்றுமையான வாழ்வுள்ள குடும்பமாக வாழமுடியும். குடும்ப ஒற்றுமை குலையுமானால் பிள்ளைகள், உற்றார், உறவினர் அனைவரதுவாழ்வுமே குட்டிச்சுவராகிவிடும்.

கணவன் குடிகாரனாக இருந்தால் அல்லது சந்தேகக்கண்ணோடு மனைவியைப் பார்த்தால் குடும்பத்தில் வேற்றுமை தாண்டவமாடும். கணவனின் குணமறிந்து மனைவி கருமமாற்றாவிட்டாலும் குடும்பத்தில் பிணக்குகள் தோன்றும். ஒன்றுபட்டு வாழவேண்டிய குடும்பம் சின்னாபின்னப்படும். கணவன் மனைவியின் ஒற்றுமையின்மை பிறக்கும் பிள்ளைகளைப் பாதிக்கும். "முதற்கோணல் முற்றுங் கோணல்" என்பதற்கிணங்க குடும்பச்சூழலிலேயே ஒன்றுபட்டு வாழும் பண்பை பிள்ளைகள் இழந்துவிடுகின்றனர்.

இந்த இழிகோல நிலை பாடசாலைப் பருவத்திலும் பிள்ளைகளைப் பாதிக்கின்றது. குடும்பத்தில் பழகாத ஒற்றுமைப் பண்பு பாடசாலை மாணவர்களிடையே பாதிப்பை உருவாக்குகின்றது.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு"

என்ற பாரதியின் சிந்தனையைப் பாடசாலை பசுமரத்தாணிபோல் மாணவர்களிடையே ஊட்டினாலும் குடும்பச்சூழலின் தாக்கம் மாணவர்களைப் பாதிக்கவே செய்கின்றது.

"ஐந்தில் வளையாததை ஐம்பதில் வளைப்பது" கஸ்டந்தான். மாணவச் செல்வங்கள் போட்டி, பொறாமை, பூசல் என்பவற்றுடன் வளருவார்களேயானால் நாட்டின் எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடும். ஒற்றுமை என்னும் உயர்ந்த குணநலனுக்கு மாறாக தீயநட்பு, தீயஒழுக்கம் என்பனவே வளருகின்றன. மாணவர்கள்கல்விகற்க வேண்டிய வயதிலே கல்வியைக் கற்காது தமது வாழ்வைத் தாமே அழித்துக்கொள்கின்றனர். சங்ககாலத்திலே போற்றப்பட்ட தெய்வீகக்காதல் தற்காலத்திலே நிலைதடுமாறி காமக்காதலாக உருவெடுப்பதைப் பார்க்கின்றோம்.. அது மட்டுமா? இளம் வயதிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்குழந்தையுடன் நீதிமன்றில் ஜீவனாம்சம் கோரும் பரிதாப நிலையைப் பார்க்கின்றோம். தற்கொலை புரியும் பரிதாபத்தையும் காண்கின்றோம். எப்போது மாறும் இந்த நிலை. இந்த நிலை மாறுமா?

பசுமை நிறைந்த பாடசாலைப் பருவத்தில் ஒற்றுமை உணர்வு வளராவிட்டால் தொழில் நிறுவனங்களும், தொழிற்சாலைகளும் பெரும் பின்னடைவையே சந்திக்க வேண்டி வரும். குடும்பச் சூழல், பாடசாலைச் சமூக சூழல் என்பன ஒன்றுபட்ட சமூகத்தை உருவாக்கத் தவறினால் தொழிற்போட்டி, பதவிப்போட்டி, பொறாமை உணர்வு என்பன தலைதூக்கும். செல்வாக்கு மிக்கவர்களும், பந்தம் பிடிப்பவர்களும் பதவி ஆசையால் ஒற்றுமையைச் சீர் குலைப்பர். நேர்மையும், திறமையும், செயற்றிறனும் உள்ளவர்கள் பின்தள்ளப்படுவர். இதனால் நிறுவனச் செயற்பாடும் பாதிப்புக்குள்ளாகும்.

இப்பரிதாப நிலைக்கு இன, மத, மொழி, சாதி சமய வேறுபாடுகளும் காரணமாக அமைவதைக் கண்கூடாகக் காணமுடிகின்றது.

"பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையால்".

என்கிறது திருக்குறள். பிறப்பினால் எல்லா உயிர்களும் ஒன்றே என்பது இதன் கருத்தாகும். உலகில் உள்ள மக்கள் எல்லோரும் ஒரு தாயின் குழந்தைகளே என்கிறார் புரட்சிக்கவிஞர். இவைகள் அனைத்தும் படிப்பதற்கும், கேட்பதற்கும் இனியனவாகவே இருக்கின்றன. ஆனால் செயற்பாடு மாறாகவே அமைகின்றது. பிறப்பில் சமத்துவமான மனித இனம் தொழில் ரீதியால் சாதி மயமாகின்றது. "செய்யும் தொழிலே தெய்வம்" என்பதை மனிதகுலம் மறந்து விடுகின்றது. இதனால் சாதிச்சண்டை வளர்ந்து மனித இனம் அழிவுப்பாதையை நாடி நிற்கின்றது. இந்த நிலை மாறுமா? இந்த இழிநிலை தொடர அனுமதிப்பதா?

சாதிச்சண்டையால் மட்டுமின்றி சமயச்சண்டையாலும் மனித இனம் பிளவு பட்டுக்கொண்டே போகின்றது. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற தாரக மந்திரத்திற்கு மாறாக சமயச்சண்டை தலைவிரித்தாடுகின்றன. எல்லா மதங்களும் சென்றடைகின்ற இடம் ஒன்றே என்பதை உணர முடியாது. முட்டி மோதுகின்றன. இறைவன் ஒருவனே. பக்தர்கள் பல்வேறு வழிளில் ஒரே பரம்பொருளையே அடைகின்றனர். இதையே இராமகிருஷ்ண சுவாமிகள் பின்வருமாறு தெளிவாக விளக்குகின்றார்.

"ஒரு குளத்தை எடுத்துக் கொள்வோம். அதில் நான்கு படித்துறைகள். இந்துக்கள் ஒரு படித்துறை வழியாக இறங்கி நீரைப் பருகிவிட்டுத் தண்ணீர் என்கின்றனர். முஸ்லீம்கள் இன்னொரு படித்துறையால் இறங்கி நீரைப்பருகிவிட்டுப் பாணி என்கின்றனர். ஆங்கிலேயரோ அடுத்த படித்துறையால் இறங்கி நீரைப்பருகிவிட்டு வாட்டர் என்கின்றனர். மற்றொரு படித்துறையால் இறங்கியோர் அக்வா என்கின்றனர். ஆனால் பரம்பொருளோ ஒன்றுதான் இறைவனும் ஒருவனே. நாமங்களோ பல" நிலைமை இப்படி இருக்க ஆலயங்களை ஏன் இடிக்கவேண்டும்? எதற்காக நீண்டகாலமாக பகைமையுடன் போராடவேண்டும். இழிவான இந்த நிலை மாறுமா?

இது மட்டுமா ஒன்று பட்டு ஒற்றுமையாக வாழவேண்டிய மனித இனம் மொழி வேறுபாட்டாலும், இன வேறுபாட்டாலும் வேற்றுமை உணர்வுடன் செயற்படுவதனால் ஒற்றுமை குலைகின்றது. அதிகாரமும், ஆதிக்கமும் கூடிய பெரும்பான்மை இனம், சிறுபான்மைச் சமூகத்தை நசுக்க முனைகின்றது. இதனால் இன்பமாக வாழவேண்டிய இளம் சந்ததியினர் அநியாயமாக அழிக்கப்படுகின்றனர். சுதந்திரமாகவும் ஒற்றுமையாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையுடன் வாழ்வதற்கு மொழி அல்லது இனம் தடையாக இருக்கவேண்டுமா?

ஒற்றுமையுடன் செயற்பட்டு உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமென்ற ஓரினச்சமூகத்திலும் வேற்றுமையே மலிந்து காணப்படுகின்றது. ஒற்றுமையை ஓரளவுக்கேனும் காணமுடியவில்லை. சமூகத்தை நேரான பாதையில் வழிநடத்த வேண்டிய சமூக நிறுவனங்களிடையேயும் ஒற்றுமையான மனோபாவம் இல்லை.

சனசமூகநிலையங்களுக்கிடையே புரிந்துணர்வும், ஒற்றுமையும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. நிர்வாக மட்டங்களிலும் ஒற்றுமையில்லை. ஒற்றுமை என்னும் பண்பை வளர்க்க உதவும் விளையாட்டுக்கழகங்களிடையே கலகங்கள் வீறுநடை போடுவதைக் காணமுடிகின்றது. பிரதேச வேறுபாடு மலிந்து காணப்படுகின்றது. உலகளாவிய போட்டிகளிலே சூதாட்டம் சூசகமாகத் தோன்றி ஒற்றுமை குலைகின்றது. நிர்வாக நிலைகளிலும் தலைமைத்துவப் பண்புகளிலும் பொறாமையுடன் கூடிய போட்டி உருவாகி ஒற்றுமைக்குப் பதிலாக வேற்றுமையே மேலோங்கி நிற்கின்றது.

வீட்டிற்கு வீடு வாசற்படி என்பது போல, நாட்டுக்கு நாடும் போட்டியும் பூசலும் வளர்ந்து வருகின்றன. ஆக்கத் திறனுக்குப் பயன்படவேண்டிய விஞ்ஞானத்தை தவறாகப்பயன் படுத்தி ஆயுத உற்பத்தி மேற்கொள்வது மிகுந்த வேதனையைத் தருகின்றது. உலகளாவிய சமாதான மன்றமாக ஐ.நா.சபை இருந்த போதிலும் இந்திய, பாகிஸ்தான் எல்லைப் பிரச்சினை அமெரிக்க, ஈராக் நெருக்கடி போன்ற பல பிரச்சனைகள் தீர்க்கப்படாத நிலையிலேயே இருக்கின்றன.

சமீபகாலங்களில் கிழக்கு ஐரோப்பாவிலும் ஏனைய இடங்களிலும் இடம் பெற்ற போர்களால் கோடிக்கணக்கான மக்கள் அவதியுற்றதையும் அனேகமானோர் இறந்ததையும் நாமறிவோம். இப்போதும் பல இடங்களில் கலவரங்கள் நடப்பதையும் ஊடகங்கள் மூலமாக உணர்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த நிலைமையை மாற்றுவதற்காகவும், ஒன்றுபட்ட ஐக்கிய உலகைக் காண்பதற்கும் பல முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. உதாரணமாக ஐரோப்பிய யூனியன் முழுவதற்கும் ஒரே புதிய நாணயம் யூரோ அதிகாரபூர்வ மாக அறிமுகப்பட்டதைக் கூறலாம். இது "ஐரோப்பிய ஒருமைப்பாட்டின் மணிமகுடம்" எனப் புகழப்படுகின்றது. இருப்பினும் இதற்கும் பல தடைக்கற்கள் இருப்பதாகவும் அறிய முடிகின்றது.

எத்தகைய தடைக்கற்கள் இருந்தபோதிலும் உலக சமாதானமும் ஒற்றுமை உணர்வும் வளர்க்கப்பட வேண்டியவை என்பதை அறிவாற்றல் மிக்க மனித சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. இத்தகைய அறிவாற்றல்மிக்க சமூகத்தின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. இந்நிலை மாற்றப்பட்டு அறிவாற்றலும், ஒற்றுமையும், புரிந்துணர்வுமுள்ள உலக சமுதாய எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்பதே உலக சமாதான விரும்பிகளின் பேரவாவாகும்.

(அடுத்த இதழில்)

**<u>என்னால் உதவ முடியாது</u>**

பாவம் விட்டில் பூச்சி
நான் உனக்கு உதவ முடியாது
விளக்கை அணைக்க மட்டுமே
என்னால் முடியும்



(செஸ்லாவ் மிலோஸ்' இன் உலகக்
கவிதைகளின் தொகுப்பிலிருந்து
தமிழில் பசுவையா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வரவுகள்

தொகுப்பு-பிரியா



"இந்த மண்
எனது கால்களின்
கீழுள்ள
தூசிப்படலம் அல்ல.
உணர்வார்ந்த பிடிப்பின்
தூர்ந்து போகாத
உயிர்த்தலம்",
-சு.வி.

நூல்:- நெற்றி மண்
(கவிதைகள்)
ஆசிரியர்: சு.வில்வரத்தினம்.
வெளியீடு: கூடல் பதிப்பகம்
198.'.2, கீழை வீதி,
உவர்மலை,
திருகோணமலை.
☎ 026-21799
விலை: ரூபா 100/=



"ஒரு நிறுவனத்தையும் அதன் ஆளணியினரையும் நிர்வகிப்பது அல்லது மேற்பார்வை செய்வதுடன் பொருத்தமான ஆளணியையும், பௌதிக உள்ளகக் கட்டமைப்பைப் பேணுவதிலும் ஒழுங்கான மேற்பார்வை, கண்காணிப்பு என்பவற்றுடன் ஊழியர்களின் தனிப்பட்ட நலன்களைப் பாதுகாத்து அவர்களைத் திருப்திப் படுத்துவதன் மூலம் அந்த நிறுவனத்தின் உச்ச வெளியீட்டை அதிகரிப்பதுதான் முகாமைத்துவம்"
- ந.அனந்தராஜ்.

நூல்:- முகாமைத்துவ நுட்பங்கள்
(அதிபர்களுக்கான அனுபவக்குறிப்பேடு)
ஆசிரியர்: வல்வை ந.அனந்தராஜ்.
நூலினைப் பெற்றுக்கொள்ள
திருமதி.அ.வனிதா.
36, புதியசோனகத் தெரு,
திருகோணமலை.
விலை ரூபா 125/=



"புகலிடத்திலிருந்து சிறுகதைகளுக்கென தனித்துவமாக வெளிவரும் சஞ்சிகை"

சஞ்சிகை: அம்மா
(புரட்டாதி 2000)

தொடர்புகளுக்கு:-
S.Manoharan.(Esc-13)
210 Ave. du 8 mai 1945,
93150 Le Blanc Mesnil,
FRANCE.
m1a2n3o4@aol.com




"நவீன கோட்பாடுகளை உள்வாங்கி தமிழ் இலக்கியத்தின் கருத்தியலையும், தமிழர் பண்பாட்டின் சமூகக் கட்டமைப்பையும் கேள்விக்கு உட்படுத்தும் சஞ்சிகை"

சஞ்சிகை : எக்ஸில்
(இதழ் 10) ஏப்- ஒக் . 2000
தொடர்புகளுக்கு: EXIL
B.P-204
92604 ASNIERES CEDEX
FRANCE
E-MAIL: exil-inba@ infonie.fr



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொல்லாமலே...

~எஸ்~குணேஸ்~

## ஓவியர் மாற்கு

"நான் தேடுகிறேன்.... கண்டுபிடிக்கின்றேன்... கீறுகின்றேன்....
நீங்களும் தேடுங்கள்..... கண்டுபிடியுங்கள்... ரசியுங்கள்....."

இது அண்மையில் மறைந்த ஓவியர் மாற்கு அவர்கள் அடிக்கடி கூறிய வார்த்தைகள்.

ஈழத்துத் தமிழ்ச் சூழலில் நவீன ஓவியம் குறித்த வெளிப்பாட்டை ஒரு செயற்பாடாக முன்னெடுத்துச் சென்றவர்களில் ஓவியர் மாற்கு அவர்கள் முக்கியமானவர்.

தனது படைப்புக்களுக்கு நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கித்தான்(Canvas) என, இன்ன ஊடகங்கள்தான் வேண்டும் எனக்கூறி தன் படைப்புக்களை வரையறைப்படுத்தியவரல்ல மாற்கு அவர்கள்




பொதுவாக தனக்கென ஒரு பாணியை வரித்துக்கொண்டு செயற் பட்டவர். 90களுக்குப் பின்னரான சமகாலத்துநிகழ்வுகள் இவரின் ஓவியங்களில் அதிகம் பதிவுகளாக் கப்பட்டுள்ளன. கறுப்பு வெள்ளை யிலான கோட்டோ ஓவியங் களில் மனித முகங்களினூடாக கொண்டுவரப்படும் உணர்வுகள் மிக முக்கியமானவை.

கிராமியக் கலைகளிலிருந்து தமது ஓவியங்களுக்கு வீரியமூட்டிய உலகப்புகழ் பெற்ற ஓவியர்களான பிக்காஸோ, மற்றும் ஜாமினிராய் ஆகியோர் போன்று மாற்கு அவர்களும் கிராமியக் கலைகளை தன் வெளிப்பாட்டில் உருவாக்கியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவரின் காவடியாட்டம், நாய்கள் சண்டையிடல், நாதஸ்வரக் கலைஞர், நடனமாடும் பெண், சிவ நடனம், போன்ற தலைப்புக்கள் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

ஓவியம் தவிர சிற்பத்திலும் நவீன வெளிப்பாடுகள் யாவற்றிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர். "தேடலும் படைப்புலகமும்" என்ற எழுத்து வடிவத்தை படைப்புலகிற்கு தந்துள்ளார்.

ஈழத்து ஓவியத்துறைக்கு வலுச்சேர்க்கும் இவரின் படைப்புக்கள் பேணிப்பாதுகாக்கப்பட்டாலே அடுத்து வரும் சந்ததியினரும் ஈழத்து ஓவியத்துறையின் அருமை பெருமைகளை நாளை உணரக்கூடியதாக இருக்கும்.




இந்தியத் தமிழ்த் திரைப்பட உலகில் சற்று வித்தியாசமான பார்வைக்குரியவர் நடிகர் கமலஹாசன். தனது நடிப்பாற்றல் மூலம் கலைத்துவ நேர்த்தியுடனும், வித்தியாசமான பாத்திரங்கள் ஏற்றும் தனது படங்களைத் தர நினைப்பவர்.


அண்மையில் வெளிவந்த 'தெனாலி' திரைப்படம் நகைச்சுவை கலந்த நிலையில் வணிக நோக்கில் தயாரிக்கப்பட்ட படமாகும். இப்படத்தின் கதை, மற்றும் கமலஹாசன் பேசும் மொழி என்பன கவனத்திற்குரியன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் இடம்பெற்றுவரும் இனப்போராட்ட சூழலின் அவலப்பட்ட வாழ்வு நவீன இலக்கியங்களிலேயே அதிகளவில் பதிவாகி வருகின்றது. ஆனால் இதுவரையில் இவ்வாறான கதையமைப்பிணைக் கொண்ட இந்தியத் தமிழ்த் திரைப்படங்கள் எவையும் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

தமிழ்த் திரைப்படங்களில் சினிமா மொழியையே கேட்டுப் பழக்கப்பட்டுவிட்ட ரசிகர்களுக்கு, கமலஹாசன் பேசும் யாழ்ப்பாணத்து மொழிநடை சற்று வியப்பாகத்தான் இருக்கும். ஆனாலும் எத்தனையோ இடப்பெயர்வுகளையும், அவல வாழ்வையும் முகத்துக்கு நேரே அனுபவப்பட்ட எமக்கு 'தெனாலி'யின் கதையும், மொழியும் எந்தவிதமான உணர்வுகளையும் ஏற்படுத்தப் போவதில்லைத்தான்.

இருந்தாலும் ஒரேயொரு கவலைதான் பாருங்கள்! எமது நாட்டு மக்களின் அவலவாழ்வு தெனாலியில் நகைச்சுவையாகிவிட்டது. என்ன செய்வது? பணம் பண்ணுவதற்கு எத்தனையோ வழிகள் உண்டல்லவா? அதில் ஒன்றுதான் 'தெனாலி'!




தமிழ் பேசும் ஈழத்தவரின் ஒரு நூற்றாண்டு காலவரலாறு நுண்படச்சுருள்களாக்கப்படுகின்றன. இப்பணியில் திரு,திருமதி.குரும்பசிட்டி இரா.கனகரத்தினம் ஈடுபட்டுள்ளனர்.

இப்படச்சுருள் தொகுப்புக்களில் 1989 முதல் 2000 வரையிலான ஆங்கில தமிழ் பத்திரிகை நறுக்குக்கள் மற்றும் Ceylon Patriot (1864), ஈழகேசரி(1930), சுதந்திரன், Saturday Review, திசை, சரிநிகர், தினமுரசு, Lanka Gardian, Sanson, Commission Evidence, கேசரி, புதிய கண்ணோட்டம், புலம்பெயர் நாட்டு ஏடுகள், சஞ்சிகைகள், 8000க்கும் மேற்பட்ட பல்துறைக் கட்டுரைகள், சரித்திரக் கார்ட்டூன்கள், 2000 வரையிலான உள்ளூர்ச் சஞ்சிகைகள் ஏடுகள், 1930லிருந்து இன்றுவரை வெளிவந்த பல்வேறு ஆங்கில தமிழ் ஏடுகளின் கார்ட்டூன்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

வருங்காலத் தலைமுறையினருக்காக இலங்கையிலும் தமிழ் வழங்கும் நாடுகளிலும் இப்படச்சுருள்களின் தொகுப்புக்கள் பேணிப் பாதுகாக்கப்படவுள்ளனவாம்.

இன்னுமோர் ஈழத்தமிழர் வரலாற்று இடைவெளி ஏற்படாதிருக்க இதுபோன்ற பணிகள் மேலும் தேவையல்லவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KADDAIVELY - NELLIADY
M. P. C. S. Ltd.
KARAVEDDY

# விவாத அரங்கு

## சிறந்த இளைய தலைமுறையினரை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிப்பது

## சமூக சூழலா? குடும்ப சூழலா?

**சிறந்த இளைய தலைமுறையினரை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிப்பது சமூகசூழலே -கி.நவநீதன் (ஆசிரியர்)**

சமூகமென்பது பொது இலக்குகளையும் விழுமியங்களையும் கொண்ட குறித்த பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் கூட்டத்தினைக் குறிக்கும். இவ்வாறமைந்த சமூகத்தினையும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சமூகங்களையும் சமூகசூழல் என்று குறிப்பிடலாம்.

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், அறிவியற்கூடங்கள், வழிபாட்டிடங்கள், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், வைத்தியசாலைகள், சமூகசேவை அமைப்புக்கள், விளையாட்டுக்கழகங்கள் போன்ற இன்னோரன்ன அமைப்புக்கள் யாவும் சமூக சூழலின்பாற்படுகின்றன.

சிறந்த கல்வியறிவு, விவேகமான வீரம், பிறரை மதித்து ஒழுகும் பாங்கு, கொடைத்திறன், விருந்தோம்பல், பிறஉயிர்களை நேசித்தல், பஞ்சமாபாதகங்களிலிருந்து விலகியிருத்தல், பொறுமை, அன்பு,கடமையுணர்வு, சிறந்த ஆளுமைப் பண்பு போன்ற இயல்புகளை உடைய இளைய தலைமுறையினரே சிறந்த இளைய தலைமுறையினர் என அழைக்கப்படுகின்றனர்.

இவ்வாறான சிறந்த இளைய தலைமுறையினரை உருவாக்குவதில் சமூகசூழலின் பங்கு எத்தகையது என நோக்குவோமாயின் கருப்பையில் குழந்தையொன்று உருவாகிய நாளிலிருந்தே அக்குழந்தையின் தேகாரோக்கியம், சுகநலன் சார்பாக சமூக சூழல் மகத்தான பங்களிப்பை வழங்கி வருவதை அவதானிக்கமுடியும். மருத்துவர்களால் கர்ப்பவதிகளுக்கு ஆலோசனைகளும், உதவிகளும் வழங்கப்படுகின்றன. மகப்பேற்றின்போது தாயினதும் சேயினதும் ஆரோக்கியம் மருத்துவர்களால் பேணப்படுகின்றது. மேலும் தாயினதும் குழந்தையினதும் உடலாரோக்கியத்தை பேணுதற்கேற்ற உணவு வகைகளையும் சமூக சூழலிலிருந்தே பெறவேண்டியுள்ளது. அது மாத்திரமன்றி உணவை வாங்குவதற்கான பணத்தைக்கூட குழந்தையின் தந்தை சமூகசூழலில் தொழில்புரிந்தே பெறவேண்டியுள்ளது. ஒட்டுமொத்தமாக உடலுறுதி உடைய, உளச் சிதைவற்ற பிள்ளையொன்றின் ஜனனத்திற்கு சமூக சூழலே உறுதியான அத்திவாரமாக அமைந்திருப்பது ஐயந்திரிபற்ற உண்மையாகும்.

பிள்ளைகள் சமூக சூழலில் இல்லாது குடும்ப சூழலிலேயே வயோதிபப் பருவம்வரை வாழ்வார்கள் எனின் அப்பிள்ளைகளுக்கு அதிக கட்டுப்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படமாட்டாது. குடும்ப சூழலில் உள்ள பாசப்பிணைப்புகள் காரணமாக குடும்ப சூழலில் உள்ள ஏனையோர் குறித்த பிள்ளைகளின் தவறுகளை பெரிதாகக் கருதாது பொறுத்துக்கொள்வர். அவ்வாறு அப்பிள்ளைகளால் குடும்ப சூழலில் மாத்திரம் வாழமுடியாது. அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் போன்றவற்றைப் பெறுவதற்காகவும் அவற்றை விருத்தி செய்து கொள்வதற்காகவும் அப்பிள்ளைகள் சமூகசூழலிற்குள் உட்பிரவேசிக்க வேண்டிய தேவையுள்ளது. அவ்வாறு உட்பிரவேசிக்கின்ற போது பொய், களவு, கொலையுணர்வு போன்ற தீய பழக்கங்கள் அற்றவர்களாகவே அவர்கள் சமூக சூழலிற்குள் வரவேண்டும். அவ்வாறல்லாமல் தீயபழக்க வழக்கங்களை உடையவர்களாக அப்பிள்ளைகள் காணப்படுகின்றபோது அவர்கள் சமூகத்தின் சட்டதிட்டங்களுக்கேற்ப நீதியின்முன் நிறுத்தப்பட்டு, உரியமுறையில் தண்டிக்கப்பட்டு, மனந்திருந்தியவர்களாக, நற்பழக்கங்களை பின்பற்ற உந்தப்பட்டவர்களாக, நற்பிரஜைகளாக மாற்றப்படுகின்றார்கள். இவ்வாறு சமூகத்தினால் தண்டிக்கப்படுவதை தவிர்க்கவே தீயபழக்கங்களை பிள்ளைகளிடமிருந்து களைவதற்கு முயற்சித்தாலும் அம்முயற்சிகள் பெருமளவில் வெற்றியடைவதில்லை. இவ்வாறான பிள்ளைகள் சமூகசூழலிற்குள் வந்ததும் சமூகத்தினால் திருத்தப்பட்டு, புடம்போடப்பட்டு ஒழுக்க சீலர்களாக உயர்வடைகின்றார்கள். எனவே சமூக சூழலே சிறந்த இளைய தலைமுறையினரை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிப்பது நிதர்சனமாகின்றது.

பாலர் நிலையில் பாடசாலை செல்லும்பிள்ளை இறக்கும்வரை கற்பதற்கும் அறிவை வளர்ப்பதற்கும் சமூக சூழலே களமாக அமைகின்றது. சமூகசூழலில் உள்ள ஆலயங்கள் ஆன்மீகரீதியான சிந்தனைகளை தூண்டுகின்றன. இதனால் உள்ளம் தூய்மையடைகின்றது. வேற்றுமைகளை நீக்கி கருத்தொருமித்து செயற்படும் பக்குவம் வளர்க்கப்படுகின்றது. இத்தகைய சீர்மிகு பேற்றினை சமூக சூழலிலேயே பெறமுடியும். இத்தகைய சமூகசூழலுடன் தொடர்புபடாது அடர்ந்த நெடுங்காடுகளின் மத்தியில் வாழ்கின்ற வேடர் குடும்பங்களில் உள்ள பிள்ளைகளால் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் விமோசன மேதுமுண்டோ? எனவே சிறந்த இளைய தலைமுறையினரை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிப்பது குடும்பசூழலாகும் என்பதில் அர்த்தமேதுமுள்ளதா?

ஐம்பெரும் காப்பியங்களைப் படித்த பலர் சிறந்த பண்பாளர்களாக மிளிர்கின்றார்கள். அவற்றை வாசித்து அறியமுடியாத பலர் நாடகவடிவிலும் பிரசங்க வடிவிலும் பார்த்தும் கேட்டும் மனந்திருந்தியவர்களாக மாறிவருகின்றார்கள். சத்திய சோதனை என்ற நூலை எழுதிய மகாத்மாகாந்தி அந்நூலில் தன்னை வாய்மையுடையவனாகவும் நேர்மையுடைய வல்லவனாகவும் ஆக்கியது அரிச்சந்திரன் எனும் கதையே என்று குறிப்பிட்டுள்ளார். காப்பியங்களில், கதைகளில், கவிதைகளில்உள்ள செம்மைசார் அறக்கருத்துக்களை சமூகசூழலில் பெறுவது போன்று குடும்ப சூழலில் பெறமுடியாது.

கட்டுப்பாடுகளின்றி மனம்போன போக்கில் வாழ்ந்தவர்கள் பாலியல் துஸ்பிரயோகங்களில் ஈடுபட்டவர்கள் பட்ட அவலங்களையும் மரணங்களையும் ஒருவர் தன்னைச் சுற்றியுள்ள சமூகசூழலிலேயே நேரடியாகக் கண்டு கொள்ளமுடிகின்றது. பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, போன்ற ஊடகங்களுடாக நெறிகெட்ட மாந்தரின் நிலை கெட்ட சம்பவங்களை அறியமுடிகின்றது. இவ்அறிதற் செயற்பாடு நல்லதையும், கெட்டதையும், தர்மத்தையும் அதர்மத்தையும் தரம்பிரித்து அறிய உதவுவதோடு நல்வழியையும் வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றது. தீயவழிகள் தீண்டத்தகாதன என்ற உண்மை திடமாக மனதிற் பதிகின்றது. எனவே ஒவ்வொருவரும் இதன்வழி திருந்தி வாழ்கின்றபோது அதனூடாக சிறந்த இளைய தலைமுறையினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்படுகின்றனர்.

சொற்ப பணத்திற்காகவும் அற்ப சலுகைகளுக்காகவும் சொந்தப் பெற்றோரே சின்னஞ்சிறு பிஞ்சுகளை பிறரிடம் வேலைக்கு அனுப்புகின்றனர். இப்பெற்றோர் இச்சிறார்களது எதிர்காலம் பற்றி கிஞ்சித்தும் கரிசனை கொள்வதில்லை. இச்சிறார்களே பின்னாளில் சமுதாயத்திற்கு விஷமேற்றும் கொடியவர்களாக கோர தாண்டவமாடுகின்றார்கள். இதனை நன்குணர்ந்த சர்வதேச சிறுவர் சம்மேளனம் (I.L.O), சிறுவர்உழைப்பை இல்லாதொழிப்பதற்கான சர்வதேச அமைப்பு (I.P.E.C) போன்றன 14 வயதிற்குக் குறைந்தவர்களை வேலைக்கமர்த்துவதை தண்டனைக்குரிய குற்றமாக சர்வதேசரீதியாக பிரகடனப்படுத்தி குற்றவாளிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு இத்தகைய சிறுவர்களுக்கு மறுவாழ்வளிப்பதனூடாக சிறந்த இளைய தலைமுறையினரை உருவாக்குகின்றது.

கல்கத்தாவிலுள்ள அன்னை திரேசாவின் அனாதைகள் இல்லம் போன்ற எத்தனையோ சமூக அமைப்புக்கள் கதியற்ற பலர் வாழ்வை காத்திரமான செந்நெறி வாழ்வாக மாற்றியமைத்துக் கொண்டிருக்கின்றன. இவ் அமைப்புக்கள் சிறந்த பண்பாளர்களையும், அறிஞர்களையும், பேராசிரியர்களையும் நமது சமூகத்திற்கு தந்து கொண்டிருப்பதை நேரடியாகவே காணமுடிகின்றது.

இன அடக்கு முறைகள் சமூக ஒடுக்குமுறைகளால் ஒவ்வொருவரும் பாதிக்கப்படுகின்ற போது அதனை வீறுகொண்டு தகர்த்தெறிந்து வெற்றி கொண்டு சிறந்த இளைய தலைமுறையினரை உருவாக்க குடும்பசூழலால் முடிவதில்லை. அவ் அடக்குமுறைகள் பற்றிய விழிப்புணர்ச்சிக்கு சமூக மயப்படுத்தப்படுகின்றபோது சமூகரீதியான எழுச்சியும் கிளர்ச்சியும் ஏற்பட்டு அடக்குமுறையின் கொடிய கரங்கள் அறுத்தெறியப் படுகின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான வியட்நாமிய, கியூப நாடுகளின் போராட்டங்களிலும் இலங்கை இந்திய நாடுகளில் தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களிலும் தென்னாபிரிக்க நிறவெறி எதிர்ப்புப் போராட்டங்களிலும் இவ்வுண்மையை தெளிவாக இனங்காண முடிகின்றது. எனவே சமூக சூழலே சிறந்த இளைய தலைமுறையினரை உருவாக்கவதில் பெரும்பங்காற்றுகின்றது என்பது தெளிவாகின்றது.

விஞ்ஞானிகளின் கூட்டுமுயற்சிகளின் பயனாகப் பெறப்படுகின்ற அறிவே விஞ்ஞானம் என்று வரையறுக்கப்படுகின்றது. விஞ்ஞானத்தின் வியத்தகு வளர்ச்சியால் வசதிகளும் வாய்ப்புக்களும் அதிகரிக்கின்றன. இதனால் உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை ஒவ்வொருவரும் பெறமுடிகின்றது. இதனூடாக சிறந்த இளைய தலைமுறையினர் உருவாக்கப்படுகின்றனர். ஒவ்வொரு விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுக்கும் தனியே ஒருவர் மாத்திரம் உரியவர் அல்லர். காலங்காலமாக பல விஞ்ஞானிகளால் ஆராயப்பட்ட, ஆராயப்பட்டு முழுமையரடயாத, பதிவு செய்யப்பட்ட தரவுகளைக் கவனத்திற்கொண்டே கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கலிலியோ கலிலியின் கண்டுபிடிப்புக்களுக்கு 12ம் நூற்றாண்டின்பின் வாழ்ந்தவர்களான றோஜர் பேகன், அடம் மார்ஸ், ஜோன் அனியூலர், ஜோர்ஜ் ஜோக்கீம் போன்றோரின் பிரபஞ்சவெளி, கோள்கள் பற்றிய ஆய்வுகள் ஆதாரமாக அமைந்திருந்தன. எனவே விஞ்ஞானிகள் சமூகத்தின் கூட்டுச் செயற்பாட்டால் இளைய தலைமுறையினருக்கு கோடிநன்மைகள் கிடைத்து வருகின்றமை வெள்ளிடைமலைபோல் வெளிச்சமாகின்றது.

சமூக அந்தஸ்த்தையும், அங்கீகாரத்தையும் பெறவேண்டும். என்ற அவாக்காரணமாக சோம்பிக்கிடந்த பலர் துடிப்புடன் செயற்பட்டு மேல்நிலைக்கு வர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடியாய்த் துடிக்கின்றார்கள். தம்மிடமுள்ள ஆற்றலை வெளிப்படுத்த விரும்புகின்றார்கள். மறைந்துள்ள ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு சமூக சூழல் வாய்ப்பினை வழங்குகின்றது. உலக வரலாற்றை புரட்டிப்பார்த்தால் சாதனையாளர்களின் பின்னே சமூக சூழலின் பலமான உந்துதல் இருப்பதை எதுவித ஐயமுமின்றி ஏற்றுக்கொள்ள முடியும்.

சமூக விஞ்ஞானியாகிய ஹொப்ஸ் "இயற்கையில் மனிதன் காட்டுமிராண்டியாக வாழ்ந்தான். இவனது வாழ்க்கை குறுகியதாகவும். மரணபயம் நிறைந்ததாகவும் தனிமையானதாகவும் இருந்தது. அவ்வேளை நீதியோ அமைதியோ நிலவவில்லை. இந்நிலையில் மக்கள் தமது பாதுகாப்புக் கருதி ஓர் ஒப்பந்தத்தை செய்தனர். அதன்வழி அரசு உருவாகியது." என்று குறிப்பிடுகின்றார். இவரது கருத்துப்படி குடும்பநிலையில் வாழ்ந்த மனிதன் சமூகநிலையில் வாழத்தொடங்குகின்ற போதே சிறந்த சௌபாக்கிய வாழ்வை பெறுகின்றான் என்று வலியுறுத்தப்படுகின்றது.

கிரேக்க தத்துவஞானியாகிய அரிஸ்டோட்டில் "ஒரு அரசின் அங்கத்தவர் ஆவதன் மூலமே மனிதனொருவன் பூரணமான நிலையை அடைகின்றான் என்று குறிப்பிடுகின்றார். அரசு என்பது சமூகங்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற சமூகங்களின் கட்டமைப்பாகும்.

கௌடில்கியர் அர்த்த சாஸ்திரம் எனும் நூலில் "துன்பங்களிலிருந்து விலகவிரும்பிய மக்கள் மன்னனுடன் செய்து கொண்ட உடன்படிக்கை வாயிலாகவே தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டனர்" என்று குறிப்பிடுகின்றார். பாதுகாப்பு ஒவ்வொருவருக்கும் முக்கியமானது. கல்வி, பொருளாதாரம்,சுபீட்சமான வாழ்வு போன்றவற்றை நேர்த்தியாகப் பெறுவதற்கு பாதுகாப்பு பிரதானமானது. பாதுகாப்பு இன்றேல், சமூக, பொருளாதார, கலாசார, அறிவியல் அம்சங்கள் சீரழியும். இத்தகைய பாதுகாப்பை சமூக சூழலே வழங்குகின்றது. இதனூடாக சிறந்த இளைய தலைமுறையினர் உருவாக்கப்படுகின்றனர்..

சோவியத் ஒன்றியம் சமஉடமைப் பொருளாதாரமாக இருந்த பொழுது, சமூகசூழல் சிறப்பாக இருந்தபோது அங்கே சகல துறைகளும் பூரண வளர்ச்சி பெற்றிருந்தன. அங்கே நற்பிரஜைகளையும், பூரண மனிதர்களையுமே காணமுடிந்தது. இந்நாடு 1991ல் பெரஸ் ரோய்கா சீர்திருத்தத்திற்கு உட்பட்டு பல கூறுகளாகப் பிளவுபட்டபின் அநாகரிகங்கள் தலைவிரித்தாடுகின்றன. அசிங்கங்கள் அரங்கேறுகின்றன. பணத்திற்காக எதையுமே இழக்க அங்குள்ள மக்களிற் பலர் பழகிவிட்டனர் என்று அங்குள்ள பொறுப்புள்ள பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் அலறியடிக்கின்றன. இந்நிகழ்வுகள் சமூக சூழல் சிதைவடைந்தால் ஏற்படக்கூடிய விளைவுகளை குடும்ப சூழலால் தடுக்க முடியாது என்பதையும் சமூக சூழலே மக்களின் நடத்தைகளைத் தீர்மானிக்கின்ற தீர்மானகரமான சக்தியாக உள்ளது என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றது. எனவே சிறந்த இளைய தலைமுறையினரை உருவாக்குவதில் குடும்ப சூழலே பெரும் பங்கு வகிக்கின்றது என்ற கூற்று அர்த்தமிழந்து போகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த இளைய தலைமுறையினரை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிப்பது குடும்ப சூழலே!

- வெ.பிறேமச்சந்திரன் (கிராமசேவையாளர்)

தாய், தந்தை, சகோதரங்கள் உள்ள தனித்தனியான குடும்பத்தை மாத்திரமல்லாது பல குடும்பங்கள் சேர்ந்த கூட்டுக் குடும்பத்தை குடும்ப சூழல் என வரையறுக்கலாம்.

ஓர் ஆணும், பெண்ணும் திருமணம் செய்து குடும்பமாக மாறுகின்றனர். இல்லற வாழ்க்கை ஆரம்பிக்கின்றது. இல்லறமே நல்லறம் எனக் கொண்டு வாழ்ந்து வரும்போது பெண்ணின் கருப்பையில் சிசு உதயமாகின்றது. அச்சிசு பத்துமாதத்தில் இப்புவிதனில் குழந்தையாகத் தவழப்போகின்றது. எனவே ஒரு தாயானவள் எண்ணுகிற எண்ணங்கள், சிந்திக்கின்ற சிந்தனைகள் எல்லாம் நற்சிந்தனைகளாக இருந்தால் பிறக்கின்ற குழந்தையும் விவேகமானதாகப் பிறக்கும். பிறந்த குழந்தைக்கு தாயானவள் தனது உதிரத்தைப் பாலாக்கி வளர்க்கும் அதே வேளையில் நல்லொழுக்கங்களையும் ஊட்டி வளர்க்கின்றாள். எனவே குழந்தைக்கு பாலூட்டி, சீராட்டி, தாலாட்டி வளர்க்கும்போதே எனது பிள்ளை நல்லவனாகவும், வல்லவனாகவும் வரவேண்டும் என ஆசைப்படுகின்றாள். இதனையே கவியரசர் கண்ணதாசன் "எந்தக்குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" எனக் கூறியிருக்கிறார். எனவே ஒரு குழந்தையை நல்லவனாக வளர்க்கின்ற பாரிய பொறுப்பு ஒரு குடும்பத்திலிருந்து வருகின்ற தாயில்தான் தங்கியுள்ளதே தவிர சமூகத்தில் தங்கியிருக்கவில்லை என்பது குன்றின் மேலிட்ட தீபம் போல் விளங்குகின்றது.

குழந்தைகள் பிறக்கின்றன. பிறந்தவுடன் குழந்தைகளைச் சமூகத்திற்குள் தள்ளிவிடுகிறோமா? இல்லை குழந்தைகள், தாய்,தந்தையரிடமிருந்தும் சகோதரங்கள் உறவினர்களிடமிருந்தும் நற்பழக்கங்களைக் கற்றுக்கொள்கின்றன. தாயானவள் குழந்தைக்கு உணவு ஊட்டி வளர்த்துவருகின்றாள். தந்தையானவர் தனது பிள்ளை அறிவுசாலியாக வரவேண்டும், சிறந்த கல்விமானாக வரவேண்டும் என்ற நோக்குடன் வளர்க்கின்றார். குழந்தை வளர்ந்து வரும்போது தனது தொடர்புகளைப் பரவலாக்கத் தொடங்கும். சகோதரர்கள், அயலிலுள்ள சிறுவர்கள், உறவினர்கள் போன்றவற்றுடன் தனது தொடர்பை விரிவுபடுத்தத் தொடங்கும். இதன்போது பொய் சொல்லக்கூடாது. களவெடுக்கக்கூடாது, பெரியவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் போன்ற நல்லொழுக்கங்களைக் கற்றுக்கொள்கின்றது. ஓர் ஆண்குழந்தைக்குத் தந்தையின் பிரசன்னம் முக்கியம் என ஆய்வுகள் கூறுகின்றன. பாலியல் குற்றச் செயல்களில் ஈடுபடும் சிறுவர்கள் பெரும்பாலும் பொறுப்புள்ள தந்தையின் செல்வாக்கைப் பெறாதவர்கள் என அறியப்படுகின்றது. வீட்டில் அன்பாகவும் சீராகவும் வளர்க்கப்பட்ட பிள்ளைகள் பள்ளியில் ஆசிரியர்களைத் திருப்திப்படுத்துபவர்களாகவும், வெகுவிரைவில் பல நண்பர்களை கொண்டவர்களாகவும் இருப்பர் என அறியமுடிகின்றது. அத்திவாரம் பலமாகவும் உறுதியாகவும் இருந்தால்தான் கட்டடத்தை தேவைக்கேற்ற அளவு விசாலமாகவும் உயரமாகவும் கட்டிமுடிக்கமுடியும். அத்திவாரம் ஈடாட்டம் காணுமாக இருந்தால் தொடர்ந்து கட்டிமுடிக்க முடியாது. எனவே ஒரு சிறந்த இளைஞனையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யவதியையோ உருவாக்குவதற்குரிய அத்திவாரம் தாய்தந்தையரினாலும் குடும்ப சூழலினாலும் உருவாக்கமுடியுமேதவிர சமூகசூழலினால் உருவாக்க முடியாது என்பது பட்டவர்த்தனமான உண்மையாகும்.

பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில் பல்லாயிரக்கணக்கான சிறுவர் சிறுமியர் விளையாடவோ பாடசாலை செல்லவோ பாலர் பருவத்தை அனுபவிக்கவோ நேரமின்றி வேலை செய்கின்றார்கள். கோடிக்கணக்கான டொலர் பெறுமதி வாய்ந்த ஏற்றுமதித் தொழிலை நிலைபெறச்செய்யும் இவர்கள் பெறும் ஊதியமோ அன்றாட சீவனத்திற்குக்கூடப் போதுமானதன்று. பிஞ்சுவிரல்கள் துரிதமாக இயங்கும் பருவமாகிய ஆறு ஏழு வயதிலேயே இவர்கள் சம்பளத்திற்கு முடிச்சுப்போடப் பயில்கின்றார்கள். நெசவுத் தறிச்சொந்தக்காரர்கள் இவர்களை விரும்பக் காரணம் பெற்றோர்களின் சிறந்த வழிநடத்தலின் கீழ்வந்த கீழ்ப்படிவும் குடும்ப வறுமை காரணமாக அற்ப சம்பளத்திற்கு மிக மோசமான நிலைமைகளில் இவர்கள் வேலை செய்ய உடன்படுவதுமேயாகும். வேலைக்கஷ்டம் காரணமாக விரல்களில் நோவும் நுரையீரல்களில் வலியும் முதுகுக்கூனலும் இச்சிறார்களுக்கு உண்டாகின்றது. வயதடையும் பருவத்தில் பெரும்பாலானவர்கள் நோயாளிகளாக வேலையிலிருந்து விலகிவிடுகிறார்கள். அனேக சந்தர்ப்பங்களில் இவர்கள் குடும்பத்தைக் காப்பாற்றும் பொருட்டு தமது சொந்தப் பிள்ளைகளையே முன்னைய வேலைத்தலங்களுக்கு அனுப்பிவைக்கிறார்கள். இப்படியான சுரண்டல் சகடைக்காய் போல சுழன்றுகொண்டே போகின்றது. இது ஒரு சமூகரீதியான பொருளாதாரச் சுரண்டல் ஆகும். இன்றைய சிறுவர்கள் நாளைய இளைஞர்கள். வளர்முக நாடுகளில் மட்டுமல்லாது அனேக தொழில்மய நாடுகளிலும் இத்தகைய பிரச்சினைகள் உண்டு. இளையதலைமுறையினரை நசுக்கும் நடவடிக்கையில் சமூகசூழல் ஈடுபடுகின்றது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஜனநாயகம் வீட்டிலேதான் ஆரம்பமாகின்றது. பெற்றோரும் பிள்ளைகளும் தத்தமது உரிமைகள் சுதந்திரங்கள் பொறுப்புக்கள் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்ளும்போது ஜனநாயகத்திற்கு அத்திவாரமிடப்படுகின்றது. பிற்கால வாழ்க்கையில் தனிமனிதன் சமுதாயத்திற்கு ஆற்றும்பணிக்கு இவ்வத்திவாரமே பெருந்துணையாக அமைகின்றது.

பலகுடும்பங்கள் சேர்ந்து சமூகம் உருவாகின்றது. சமூகங்கள் சேர்ந்து சமூக நிறுவனங்களை உருவாக்குகின்றன. ஒரு கிராமத்தில் சனசமூகநிலையங்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற பல சமூகநிறுவனங்கள் இயங்குகின்றன. இச்சமூக அமைப்புக்களை வழிநடத்தும் தலைவர் செயலாளர்களை தெரிவு செய்யும்போது ஒவ்வொருவரினதும் குடும்ப அந்தஸ்த்தைக் கருத்திற்கொண்டே தெரிவுகள் நடைபெறுகின்றன. தகப்பனும் முன்பு தலைவராக இருந்தவர். மகன் அவரைப்போலவே கெட்டிக்காரன் கொண்டு நடத்தக்கூடிய ஆற்றல் அவரிடமிருக்கும் என குடும்ப ஆற்றலே அங்கு போற்றப்படுகின்றது. எனவே இவ்வாறு குடும்ப சூழலிலிருந்து வருபவர்கள்தான் கிராமத்தில் உள்ள நிறுவனங்களை வழிநடத்துகிறார்கள். நகரத்தை வழிநடத்துகிறார்கள். ஏன் ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டால் எமது நாட்டையே வழிநடத்துகின்றார்கள். இன்று குடும்பமானது சேர்க்கையிலும் அமைப்பிலும் பெருமளவில் மாறுபட்டிருந்தாலும் சமுதாயத்தின் பிரதான கூறாக குடும்பமே இன்னமும் உலகெங்கும் மதிக்கப்பட்டு வருகின்றது.

குடும்ப சூழலில் சிறப்பாக வளரும் பிள்ளைகள் சமூகசூழலிற்கு வரும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய மாறுதல்களைச் சந்திக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. பெற்றோரின் செல்வாக்குப் பின்னடைய சகபாடிகளினது செல்வாக்கு முக்கிய இடத்தைப் பிடித்து விடுகின்றது. எதற்கும் துணிந்து செயற்படுகின்ற எண்ணம் உருவாகின்ற பருவம் குமரப்பருவமாகும். இளங்கன்று பயமறியாது என்பார்கள். இளைஞர்கள் பாலியல் வல்லுறவுகளைத் தூண்டக்கூடிய ஆபாசப் படங்களைக் காண்பிக்கிறார்கள். வெளிநாட்டுக் கலாசாரத்தை இங்கு கொண்டுவந்து பரப்புகிறார்கள். நடை, உடை, பாவனையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றார்கள். இதனால் இளைய சமுதாயமே கெட்டு குட்டிச்சுவராகக்கூடிய நிலை ஏற்படுகின்றது. இப்படித்தான் வாழவேண்டுமென்ற கட்டுப்பாடு குடும்பசூழலினால் உண்டாக்கப்படுகின்றது. எப்படியும் வாழலாம் என்பதையே சமூகசூழல் நிலைநிறுத்துகின்றது. இதில் எது சிறந்தவாழ்க்கைக்கு உதவக்கூடியதென்பதை ஆராய்ந்து பார்க்கும்போது குடும்ப சூழலே மேலோங்கி நிற்கின்றது என்பது தெளிவாக விளங்குகின்றது.

பெற்றோர்களின் வழிநடத்தல் பிள்ளைகளின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு மிகமிக இன்றியமையாததாகும். ஒவ்வொரு பிள்ளைக்கும் உய்வு, பாதுகாப்பு, மேம்பாடு என்பன இன்றியமையாதவையாகும். பிள்ளைகளுக்கு உய்வு அதாவது உயிர்வாழும் நிலைமை கருவறையில் ஆரம்பித்து கல்லறைவரையும் தொடர்கின்றது. மனிதனின் பிறப்புரிமை இயல்பு அதாவது பரம்பரை அலகே மூளைவிருத்தியைத் தூண்டுகின்றது. எனவே சிசு உதயமாகி வளர்ச்சியடைந்து குழந்தையாகப்பிறந்து ஐந்து வயதுவரை பெற்றோரினதும் குடும்ப சூழலினதும் செல்வாக்கிலேயே பிள்ளை வளர்ச்சியடைகின்றது. ஐந்து வயது வரை பிள்ளையின் மூளையில் பாரிய விருத்தி ஏற்படுவதாக அறியமுடிகின்றது. இதனால்தான் ஐந்துவயது மட்டும் பெற்றோரின் கண்காணிப்பிலிருந்து சமூகத்திற்கு அதாவது பாடசாலைக்கு பிள்ளை செல்கின்றது. பாடசாலையில் முழுவதாக பிள்ளை இருப்பதில்லை. பெற்றோரிடமே திரும்பச் செல்கின்றது. எனவே ஒவ்வொரு பிள்ளைகளினதும் உய்வு பாதுகாப்பு, மேம்பாடு போன்றவற்றிற்கு சமூகம் ஓரளவு துணைக்காரணியாக இருந்தாலும் முழுக்கமுழுக்க பெற்றோரே ஒரு பிள்ளையின் எதிர்கால வளர்ச்சிக்கு மூலவேர்போல தொழிற்படுகிறார்கள் என்பதில் எதுவித ஐயமுமில்லை.


சக்தி சஞ்சிகையை வாழ்த்துகின்றோம்

குழந்தை நோய்கள், மாதர் நோய்கள், வாதரோகங்கள்,
தோல் வியாதிகள், வயிறு சம்பந்தமான நோய்கள்,
சிறுநீர் சம்பந்தமான நோய்கள், அதிகுருதி அமுக்கம்,
தலைச்சுற்றல், ஆஸ்மா, பீனிசம், காய்ச்சல், புண்கள் (விரணங்கள்),
கிரந்தி, அவியல் புண்கள் போன்ற நோய்களுக்கு ஏற்ற தகுந்த
மருத்துவ ஆலோசனையும் சிகிச்சையும் பெறலாம்
மற்றும் பல் கட்டுதல், கிளிப் போடுதல் ஆகிய மருத்துவ சேவைகளும் இடம்பெறுகின்றன.

**Dr.M.T.கமலசிங்கம் M.D.**

சென்றல் வைத்தியசாலை

உடுப்பிட்டி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருள் சூழ்ந்த தேசத்தின்.....

- த். நவநீதன்



சொந்தம் தழுவி சொத்து சுகம் பெருக்கி
விந்தைமிகு வாழ்வு விருத்திபெற - கலையோங்க
சிந்தும் வியர்வைத்துளி சிறப்படைய மகிழ்ந்த
சுந்தரவாழ்வு சிதைந்ததே நேற்று.

ஏர்பிடித்த கரங்களிலே வளம்நிறைய
கூரான ஒழுக்கநெறி குறையகற்ற - ஆணி
வேராக நீதி தர்மம் வியாபித்த
நேர்வாழ்வு வீழ்ந்தது சாய்ந்து.

ஆன்மீகத் தேடலிலே ஆர்வமிக அகமொளிர
அன்பும் அறமும் அழகுபெற - அகந்தையற
என்பும் சதையுமாய் அறிவொடு செயலிணைந்திருந்த
இன்பவாழ்வு இடறியதே இருப்பிழந்து.

நட்புக்காய் தலைகொடுக்கும் நாணயமிகு பேறும்
சுட்டும்திசையெங்கும் பரந்த மணப்பாங்கும் - சீரிய
கட்டுக் குலையாத கனகமணி வாழ்வும்
விட்டுப் போனதே தொலைந்து.

திருநாட்கள் தெருவெங்கும் தித்திக்கும் எழிற்கோலம்
உருவாகித் தழைத்தோங்கும் கூட்டுறவு - கற்பக
தருவாகி பயனோம்பும் கீர்த்தியுறு பொதுநோக்கு
உருகும் இரும்பானதே உறுதியற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவகக் கதை



# களைகள்

- ப.தயாளதாசன்

அது வீடியோ படப்பிரதிகளை வாடகைக்கு கொடுக்கும் கடை.

இக்கால கவர்ச்சி நடிகைகளின் அரைநிர்வாணப் படங்கள் முகப்பில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. உள்ளே முதல் அடுக்கில் புதிய படப்பிரதிகளும் மறு அடுக்கில் குடும்பப் பாங்கான வேடங்களில் இழுத்துப் போர்த்திக்கொண்டு நடித்த கண்ணாம்பாள் போன்றோரின் இயற்கை அழகு காட்டும் பழைய படப் பிரதிகளும் இருந்தன.

கடைக்கு வரும்இளைஞர்களும் யுவதிகளும் புதிய படப்பிரதிகளையே தேடிவந்தனர். இந்த மதிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருந்த புதிய படப்பிரதிகளுக்குப் பெருமை தாங்கமுடியவில்லை. அவை பழைய படப்பிரதிகளை வம்புக்கிழுத்தன. "உங்களை ஒருவருமே விரும்புவதில்லை. கடைக்குப் பாரமாக இருந்து காலத்தை வீணடிக்காதீர்கள்" என்றவாறு அவை எள்ளி நகையாடிக் கொண்டிருந்தன.

பழைய படப்பிரதிகள் சாந்தமாகப் பதிலிறுத்தன. "எங்களைத் தயாரித்தவர்கள் சமுதாயத்திற்கு உதவுவதற்கு ஏற்றவகையில்தான் எம்மைப் படைத்துள்ளார்கள். நீதி, நேர்மை, கற்பு போன்ற உயர் பண்புகளை மக்களிடையே நாம் பதியவைத்தோம். ஆனால் நீங்களோ வெளிநாட்டு நச்சுக்கலாச்சாரத்தைப் பரப்பி இளைய சமுதாயத்தை நாசமாக்குகின்றீர்களே" என்றன.

புதிய படப்பிரதிகள் எதையாவது சொல்லிச் சமாளித்துவிடப் பார்த்தன.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய பழைய படப்பிரதிகள் தொடர்ந்தன. மதுவுக்கு அடிமையானவனுக்கு தேனையும், பாலையும் பருகக் கொடுத்தாலும் பருகான். புறங்கையால் தட்டிவிடுவான். மதுவால் நோயாளியாகி இறக்கும் தறுவாயில்வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றபோதே அவனுக்கு மதுவின் தீமைபற்றித் தெரியும். பாலினது அருமைபற்றி புரியும்" என்று ஆவேசமாக கூறிக்கொண்டிருந்த வேளைகடைக்குள் திடீரென நுழைந்த சமூகசேவை அமைப்பின் அதிகாரி ஒருவர் பழைய படப்பிரதியொன்றை எடுத்துக் கொண்டார். "அறவழிப் பாடசாலையொன்றில் காண்பிப்பதற்காக இப்பிரதியைத் தேடிவந்தேன்" என்ற அதிகாரியின் வார்த்தைகள் புதிய படப்பிரதிகளின் கர்வத்தைக் கலைத்தன.

## அட்டைப்படக் கவிதைப் போட்டி இல-01

வாசகர்களே!

அட்டைப்படம் கூறும் கருத்துக்களை உங்கள் பார்வையில் கவிதைகளாக்கி எதிர்வரும் பெப்ரவரி 15ந் திகதிக்கு முன்னர் அனுப்பி வையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















04~04~2000 அன்று இடம்பெற்ற கலைஇலக்கியசாகர தொடக்கவிழாவின்போது தலைமையுரையாற்றிய திரு.கி.நவநீதன், திட்ட விளக்கவுரையாற்றிய திரு.க.குணேஸ்வரன்; ஆசியுரைகள் வழங்கிய தொண்~வீ.ம.வி அதிபர் திரு.ந.அரியரத்தினம், கெருடாவில் இ.த.க.பாடசாலை அதிபர் திருமதி.த.சுரேந்திரநாதன்; வாழ்த்துரைகள் வழங்கிய பண்ணிசைமணி திரு.கதிர்.தணிகாசலம், எழுத்தாளர் திரு.குப்பிளான் ஐ.சண்முகன், சிறப்புரையாற்றிய எழுத்தாளர் திரு.தெணியான் ஆகியோரை மேலேயுள்ள படங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாலாவின் அதிர்ஸ்டத்தில்

## நீங்கள் ஒவ்வொருவரும் பங்கு கொள்ளுங்கள்

லாலா நீல சோப், சண்சயின் சோப் இவற்றில் ஏதாவது ஒன்றை உங்கள் ஆடைகளில் தேய்த்துக்கொண்டிருக்கும்போது சோப்பின் உட்பகுதியிலிருந்து லாலா சோப் அடையாளம் பொறிக்கப்பட்ட ஒரு பித்தளைத் தகடு வெளிவரும் அந்தத் தகட்டை நீங்கள் எடுத்து லாலா சோப் விற்பனையாளரிடம் அல்லது எமது விற்பனை வாகனத்தில், அல்லது லாலா சோப் தொழிற்சாலையில் கொடுத்தால் உங்களுக்குக் கிடைப்பது பெண்களுக்கான புத்தம்புதிய அழகிய ஒரு குடை.

**எனவே நீங்களும் அதிர்ஸ்டசாலியாக இன்றே கேட்டு வாங்குங்கள்**

**லால சோப் அல்லது சண்சயின் சோப்**

## லாலா சோப் தொழிற்சாலை அச்சுவேலி



கலை இலக்கியத் துறையில்
தடம் பதிக்கும் 'சக்தி' சஞ்சிகை
சிறப்புடன் மலர வாழ்த்துகிறோம்

**காலச்சுவடு, சதங்கை**

குடாநாட்டுப் பத்திரிகை, சஞ்சிகை
**மற்றும் இலங்கை இந்திய**
**வெளியீடுகள் அனைத்திற்கும்**

## உதயன் புத்தக நிலையம்

பிரதான வீதி,
பருத்தித்துறை.



சக்தியின் மலர்வுக்கு
எங்கள்

**நல்வாழ்த்துக்கள்**

உடலுக்கும் உள்ளத்திற்கும்
குளிர்ச்சியும், மகிழ்வும் தரும்
குளிர்பான வகைகளுக்கு

## நியூ லட்சுமி கூல்பார்

யாழ் வீதி,
உடுப்பிட்டி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சக்தி'யின் மலர்வு தரணியில் சிறக்க
வாழ்த்துகின்றோம்

❧ மணவறை

❧ மாலைகள்

❧ சொக்கட்டான் பந்தல்

உங்கள் மங்கள வைபவங்களுக்கு தனியழகு சேர்க்கும்

A.U.M மணப்பந்தல் சேவை

தொடர்புகளுக்கு:- வ.அருளானந்தசிவம்.
பொலிகண்டி வீரபத்திரர் கோவிலடி.



சக்தி சஞ்சிகை சிறப்புடன் மலர
வாழ்த்துகின்றோம்



கால மாற்றங்களுக்கேற்ப யாவரும் விரும்பும் வகையில்
புதியவடிவில் ஆடைகளை தைத்துக்கொள்ள
வடமரா ்சியில் தனித்துவமான இடம்



(சிமாட் ரெயிலறிங்)

பிரதான வீதி,
நெல்லியடி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை இலக்கிய சாளரத்தின் சக்தி சஞ்சிகை சிறப்புடன் மலர வாழ்த்துகின்றோம்



தென்னிந்தியாவில் பதினொரு வருடகால தேர்ச்சியினைப் பெற்று Strong Man, Outstanding Lifter ஆகிய பட்டங்களைப் பெற்று தேசிய விருதினையும் (தமிழ்நாடு-1994) தட்டிக்கொண்ட ஆசிரியர்

**கே.வி.சச்சி**

அவர்களின் மேற்பார்வையின் கீழ் வழிநடத்தப்படுகின்றது.

# இந்துஜன் உடற்பயிற்சி நிலையம்

**கெருடாவில் தெற்கு,**
**தொண்டைமானாறு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சக்தி' சஞ்சிகை என்றும் சுடர்விட்டு ஒளிர

வாழ்த்துகின்றோம்



# இரவு பகல் சேவை

# [illegible] தொலைத் தொடர்பு நிலையம்

உடுப்பிட்டி வீதி, தொண்டைமானாறு.

**070-213052** **0094-70-213052**

'சக்தி' சஞ்சிகையை வாழ்த்துவதில்
பெருமகிழ்ச்சி அடைகின்றோம்

கோவில் அபிஷேகப் பொருட்கள்
மற்றும் பலசரக்கு பொருட்களுக்கு

# மதுஷன் ஸ்ரோர்ஸ்

சந்தை வீதி,

உடுப்பிட்டி.

இரும்பு, மற்றும்
கட்டிடப் பொருட்களுக்கு



# எமரால்ட் ஹாட்வெயார்

யாழ் வீதி,

உடுப்பிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுப் போட்டி — இல:1

1. இன்ரநெற் ஊடாக முதலாவது ஒலிபரப்பும் ஒளிபரப்பும் எந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது?
2. பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களுக்கு அண்மையில் தமிழக அரசால் வழங்கப்பட்ட விருதின் பெயர் யாது?
3. 2000ஆம் ஆண்டுக்கான புதிய உலக 'செஸ்' சாம்பியன் யார்?
4. 1997ல் அமெரிக்காவின் 'கொலம்பியா' விண்வெளி ஓடத்தில் பறந்த முதல் இந்தியப் பெண்மணி யார்?
5. சர்வதேச ரீதியாகக் கீர்த்தி பெற்ற அரசியல் விஞ்ஞானியும் அண்மையில் கனடாவில் காலமாகியவருமான இலங்கைத்தமிழர் யார்?
6. பரம வைரிகளான இரு நாடுகள் அண்மையில் வர்த்தக உடன்படிக்கையினைச் செய்து கொண்டன. அந்நாடுகள் எவை?
7. ஐன்ஸ்ரீன் தனது சார்பியல் தத்துவத்தை எந்த ஆண்டில் வெளியிட்டார்?
8. 'கீதாஞ்சலி' என்ற நூலைத்தந்த ரவீந்திரநாத் தாகூர் இரண்டு நாடுகளின் தேசிய கீதங்களை இயற்றியுள்ளார். அந்நாடுகள் எவை?
9. திறந்த பொருளாதாரக் கொள்கையினால் முதன்முதலில் வெற்றிபெற்ற நாடு எது?
10. முதலாவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி எந்த ஆண்டில் எந்த நாட்டில் இடம்பெற்றது?

இவற்றுக்கான விடைகளை எழுதி இத்துடன் உள்ள படிவத்தினையும் பூரணப்படுத்தி இணைத்து பெப்ரவரி 15க்கு முன்னர் அனுப்ப வேண்டும். சரியான விடைகளை எழுதிய அதிர்ஷட சாலிக்கு ருபா[illegible] பெறுமதியான பரிசில் வழங்கப்படும். விடைகளை அனுப்பவேண்டிய முகவரி

**பொது அறிவுப்போட்டி~இல 1**<br>
**ஆசிரியர் குழு.**<br>
**சக்தி**<br>
**கலைஇலக்கிய சாகரம்.**<br>
**தொண்டைமானாறு.**



**வாசகர்களே!**

**சக்தி சஞ்சிகை பற்றிய உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய சாகர தொடக்க விழாவின்போது இடம்பெற்ற கலை நிகழ்வுகளிலிருந்து
சில படங்களை கீழே காணலாம்

நாட்டிய அரங்கம்





காத்தவராயன்
சிந்துநடைக் கூத்து

KADDAIVELY - NELLIADY
M. P. C. S. Ltd.
KARAVEDDY

பட்டி மன்றம்

நாட்டார் இசைமாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org